மலர்-1 இதழ்-11 பிப்ரவரி 1-15 இலவச புத்தகம் www.aanmeegamalar.com

ஆன்மிகமலர் டிரஸ்ட் வெளியீடு

# ஆன்மிகமலர்

மாதமிருமுறை

ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!!

## மெயில் புக்

உலக வரலாற்றில் முதன்முறையாக இமெயிலில் வெளிவரும் புத்தகம்



# ஆன்மீகத்தில் தெளிவு தரும் பதினெண் புராணங்கள்



### 1. பிரம்ம புராணம்

பிரம்மாவைப் பற்றியும், அவருடைய உலகப் படைப்புகளைப் பற்றியும் கூறுவது. கலியுகத்தில் ஏற்படும் கெடுதல்களும், மக்கள் மேற்கொள்ள வேண்டிய கடமைகளும், பக்தியின் அவசியமும் இதில் விரிவாகச் சொல்லப்பட்டுள்ளன.

### 2. பத்ம புராணம்

காயத்ரி சிறப்புகளையும், கற்பின் சிறப்பும் இதில் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கிறது.

### 3. பிரம்ம வைவர்த்த புராணம்

கிருஷ்ண பரமாத்வையே பிரம்மாவாக, பரப்பிரம்ம ஸ்வரூபமாகப் போற்றிச் சொல்லப் பட்டிருக்கிறது.

### 4. இலிங்கப் புராணம்

பரமசிவனுடைய வரலாறுகளையும், திருநீறு முதலியவற்றின் சிறப்புகளையும் இது எடுத்துச் சொல்கிறது.

### 5. விஷ்ணுப் புராணம்

விஷ்ணுவின் பெருமைகளை விளக்குகிறது.

### 6. கருட புராணம்

கருடன் கஷ்யப மகரிஷிக்குச் சொல்லியது. பிராணன் உடலை விட்டு நீங்கிய பின், அனுபவிக் கின்ற பல விதமான நிலைகளைக் கூறுகிறது.

### 7. அக்கினி புராணம்

அக்கினியைப் பற்றிய புராணம் அக்னி, வசிஷ்டருக்கு உபதேசித்தது. மனிதன் செய்ய வேண்டிய செயல்கள், கடைப்பிடிக்க வேண்டிய நன்னெறிகள் முதலியவைகளைக் குறிக்கிறது.

### 8. மத்ஸ்ய (மச்ச) புராணம்

பலவகை விரதங்களின் பெருமைகளைப் பற்றியும், தானங்கள் செய்வது பற்றியும் இதில் சொல்லப்பட்டுள்ளன. சிரார்த்தத்தின் அவசியம், பிதுர் காரியங்கள் இவைகளைப் பற்றியும் இது விளக்குகிறது.

### 9. நாரத புராணம்

நாராதருடைய வரலாறும், மனித வாழ்க்கைக்குத் தேவையான நீதிகளும் விரிவாகச் சொல்லப்பட்டிருக்கின்றன.

### 10. வராஹ புராணம்

திருமாலின் அவதார மகிமை, அன்னதானம் முதலிய தர்மங்களின் சிறப்புகளைச் சொல் கிறது.

### 11. வாமன புராணம்

வாமன அவதார நிகழ்ச் சியை எடுத்துரைக்கின்றது.

### 12. கூர்ம புராணம்

கூர்ம அவதார நிகழ்ச்சி, மாயையால் வரும் துன்பங்கள் அவற்றை நீக்கும் முறைகள் பற்றிச் சொல்கிறது.

### 13. பாகவத புராணம்

விஷ்ணுவைப் பற்றியும், தேவியைப் பற்றியும், அன்னை பராசக்தியின் பெருமைகள் பற்றியும் தெளிவாகச் சொல்கிறது.

### 14. ஸ்கந்த புராணம்

முருகப் பெருமானின் வரலாறு சொல்லப்படுகிறது.

### 15. சிவ புராணம்

சிவபெருமானின் பெருமைகளை எடுத்துச் சொல்கிறது. இலிங்கோத்பவ நிகழ்வுகள் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

16. மார்க்கண்டேய புராணம்

மார்க்கண்டேயரால், ஜைமினிக்குச் சொல்லப்பட்ட புராணம். அத்ரி, அனுசூயை முதலியோர் வரலாறுகள் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

### 17. பிரும்மாண்ட புராணம்

பிரம்மாவால் படைக்கப்பட்ட பிரும்மாண்டங்கள் குறித்த பல்வேறு செய்திகள் இதில் இடம் பெற்றிருக்கின்றன.

### 18. பவிஷ்ய புராணம்

பவிஷ்ய என்றால் வரப்போகும் என்று பொருள். கலியுகத்தில் நடைபெறவிருக்கின்ற செய்திகளையும், இறைவன் கல்கி அவதாரம் எடுக்கவுள்ள செய்தியையும் வேத வியாசர் தன் முன்னறிவால் எடுத்துச் சொல்லியவை இதில் இடம் பெற்றிருக்கின்றன



# பெருமாள் கூறிய சிவ பெருமை

16ஆம் நூற்றாண்டில் அதிவீரராம பாண்டியனால் எழுதப்பட்டது கூர்ம புராணம் ஆகும். வட மொழியில் இருந்த பாயிரத்தை தமிழில் இவர் மொழி பெயர்த்ததாகக் கூறப்படுகிறது. கூர்ம அவதாரம் எடுத்த விஷ்ணு பெருமான் சிவ பெருமானின் பெருமைகளை எடுத்துரைத்ததாக இது சொல்லப்படுகிறது. இந்த புரானமானது இரண்டு பகுதிகளாக உள்ளது. ஒன்று, பூர்வகாண்டம். மற்றொன்று உத்தர காண்டம். பூர்வ காண்டமானது 48 அத்தியாயங்களாக 2729 பாடல்கள் உள்ளது. உத்தர காண்டமானது 47 அத்தியாயங்களாக 899 பாடல்கள் உள்ளது.

சிவபெருமானின் அவதாரங்கள் அதில் 27 என சொல்லப்படுகிறது.

1. ஸ்வேதா
2. சுதாரா
3. மதனன்
4. சுஹோத்திரன்
5. கங்கணன்
6. லோகாக்ஷி
7. ஜெய் கிஷ்ஹவ்யன்
8. தாதிவாகன்
9. ரிஷபன்
10. பிருகு
11. உக்கிரன்
12. அத்திரி
13. கவுதமன்
14. வேதசீர்ஷன்
15. கோகர்ணன்
16. ஷிகந்தகன்
17. ஜடமாலி
18. அட்டஹாசன்
19. தாருகன்
20. லங்காலி
21. மகாயாமன்
22. முனி
23. ஷூலி
24. பிண்ட முனீச்வரன்
25. ஸஹிஷ்ணு
26. ஸோமசர்மா
27. நகுலீஸ்வரன்





# மதம் பிடித்த யானை

செம்மங்குடியில் பட்டாமணியார் வீட்டில் பூஜை. மடத்தின் ஸ்ரீகார்யம், ஸ்வாமி அபிஷேகத்துக்காக பட்டத்துயானை மேல் ஒரு வெள்ளிக்குடத்தில், செம்மங்குடி ஆற்றிலிருந்து தீர்த்தம் கொண்டு வந்தார். பட்டாமணியார் வீட்டுவாசலுக்கு வந்ததோ இல்லையோ, யானைக்கு மதம் பிடித்துவிட்டது!

நல்லவேளை, ஸ்ரீகார்யம் வெள்ளிக்குடத்தோடு கீழே குதித்து வீட்டுக்குள் சென்றுவிட்டார். யானைப்பாகனோ, உயிர் பிழைத்தால் போதும் என்று எங்கேயோ ஓடிவிட்டான்! ஒரே அமளிதுமளி! தெருவில் உள்ளவர்கள் அத்தனை பேரும் கிடைத்த வீட்டுக்குள் புகுந்து கொண்டு கதவை சாத்திக் கொண்டு, ஜன்னல் வழியாக கிலியோடு பார்த்துக் கொண்டிருந்தார்கள்.

யானை, கிழக்குக்கோடியிலிருந்து மேற்குக் கோடிவரை கன்னாபின்னாவென்று ஓடி, அட்டஹாசம் பண்ணிக் கொண்டிருந்தது! ஒரே பிளிறல்! பெரியவாளை வரவேற்க போட்டிருந்த பந்தக்கால்கள், தூண்கள், திண்ணையில் போட்டிருந்த தட்டிகள் எல்லாவற்றையும் அடித்து இழுத்து த்வம்ஸம் பண்ணிக் கொண்டிருந்தது! உள்ளே ஓடிய ஸ்ரீகார்யம் பெரியவாளிடம் “யானைக்கு மதம் பிடிச்சுடுத்து!......பெரியவா” மேல்மூச்சு கீழ்மூச்சு வாங்கக் கூறினார். குடத்தோடு கீழே குதித்த பயம் இன்னும் போகவில்லை. தெருவில் ஈ காக்காய் இல்லை. யானை மட்டும் இங்கே அங்கே ஓடிக் கொண்டிருந்தது.

கஜேந்த்ரவரதனாக வீட்டுக்குள்ளிருந்து வெளியே வந்தார் பெரியவா கையில் நம் எல்லாருடைய மதத்தையும் அடக்கவல்ல தண்டத்தோடு! தன்னந்தனியாக மதம் கொண்ட யானையின் எதிரே போய் நின்றார்!

“கஜேந்த்ரா! என்ன இது போக்கிரித்தனம்? பேசாமப் போய் படு!” தெய்வத்தின் குரல், நம் போன்ற ஆறறிவு, பகுத்தறிவு என்று பீற்றிக்கொள்ளும் மானிட ஜாதியை விட, ஐந்தறிவு, ஏன்? அறிவேயில்லாத அசேதன வஸ்துக்களுக்கு கூட உள்ளே சென்று வேலை செய்யும் தெய்வத்தின் குரல்..ஓங்கி ஒலித்தது!

இதோ ஐந்தறிவு ஜீவனாக, ப்ரம்மாண்டமாக அட்டஹாசம் பண்ணிக் கொண்டிருந்த யானை, பூஞ்சை மேனியரைக் கண்டதும் கட்டிப்போட்ட பசு மாதிரி வடக்குப்பக்கம் தலையும், தெற்குப்பக்கம் வாலும் வைத்து, தெருவையே அடைத்துக் கொண்டு பெரிய மூட்டை போல் மஹா சாதுவாகப் படுத்துக் கொண்டது! ஜன்னல், மேல்மாடிகளில் இருந்து இந்த கண்கொள்ளாக் காட்சியை, அதிசயத்தை அன்று கண்டு களித்த பாக்யவான்கள் ஏராளம்!

வாசலில் இருந்து கஜேந்த்ரவரதனை பார்த்துக் கொடிருந்த ஸ்ரீகார்யத்தை அழைத்து, “கல்பூரம், சாம்ப்ராணி, வாழைப்பழம், பூ.....எல்லாம் ஒடனே கொண்டா” எட்ட இருந்தே பெரியவா சொன்னதை குறித்துக் கொண்ட ஸ்ரீகார்யம், அவர் கேட்டதை ஒரு மூங்கில் தட்டில் வைத்து, யானையின் மேல் உள்ள பயத்தால், திண்ணையிலேயே வைத்து விட்டுப் போய்விட்டார்.

பெரியவா தானே அந்த மூங்கில் தட்டை கொண்டுவந்து, ஒருமணிநேரம் முன்பு தெருவையே பிய்த்துப் போட்டுவிட்டு, இப்போது சமத்து சக்கரைக்கட்டியாக வாலை சுருட்டி, உடலைக் குறுக்கி, காதைக் காதை ஆட்டிக் கொண்டிருந்த யானைக்கு கஜபூஜை பண்ணி, பூ சாத்தி, கல்பூரம் ஏற்றி சாம்ப்ராணி காட்டி விட்டு, வாழைப்பழத்தை தன் திருக்கரங்களால் அதன் வாய்க்குள் குடுத்தார். “எழுந்து போ! இனிமே விஷமம் கிஷமம் பண்ணாதே!” என்றதும், அந்த பெரிய சர்க்கரை மலை மெல்ல எழுந்து அடக்க ஒடுக்கமாக, அந்த இத்தனூண்டு தெருவில் கால்வாசி இடம் விட்டு ஒரு ஓரமாக நின்றது.

நமது மனமும் இப்படி யானை மாதிரி மதம் பிடித்து சில சமயங்களில் கண் மண் தெரியாது ஓடிக்கொண்டிருக்கும்.

யானையை அடக்கிய காஞ்சி மாமுனிவர் திருவடிகளைப் பற்றிக் கொண்டோமேயானால், மதம் தானாக அடங்கி, மனம் குழந்தையாகிவிடும். அவர் சரணங்களைத் தவிர நமக்குப் புகலிடம் ஏது?

– தெய்வத்தின் குரல்

## பொதுதேர்வுக்கு சிறப்பு வழிபாடு

10ம் வகுப்பு மற்றும் பிளஸ் 2 பொதுத்தேர்வு எழுதும் மாணவ மாணவியர் அதிக மதிப்பெண் பெற்று சாதனை படைப்பதற்காக, கூட்டு வழிபாடு சென்னை சைதாப்பேட்டை காரணீஸ்வரர் கோவிலில், 19–02–2017ம் தேதி ஞாயிற்றுக்கிழமை நடைபெற உள்ளது.

வளம் தலைமுறை வளமான தலைமுறையாக விளங்கிட இப்பெருமை மிகு பணியை, சென் னையை சேர்ந்த அண்ணா மலையார் ஆன்மிக வழிபாட்டு குழு ஐந்தாம் ஆண்டாக நடத்துகிறது. இதற்கு கட்டணம் இல்லை. அனுமதி இலவசம்.

பரீட்சைக்குரிய எழுது பொருட்கள், பூஜையில் வைத்து வழிபாடு செய்து மாணவ மாணவியருக்கு வழங்கப்படுகிறது. இதற்கு, 122 17ம் தேதி அனுமதி கூப்பன் வழங்கப்படுகிறது.

இதை பெறுபவர்கள் மட்டுமே பங்கேற்க முடியும். வாழ்வில் மிளிர முன்னெடுக்கும் இந்த நல்ல நோக்கத்திற்கு, உறுதுணையாக உதவ விரும்புபவர்கள் தொடர்பு கொள்ள 04424712173; 9944309719



# முருகனே மருந்து மருந்தே முருகன்

## பழனி முருகனின் சிறப்புகளும் உருவான விதமும்



கேரள மக்களின் சபரிமலையாக திகழ்வது பழனி முருகன் திருக்கோவிலாகும். பழனியில் உள்ள முருகன் கேரள நாடு உள்ள திசையை பார்த்தவாறு உள்ளதால்தான், கேரளா வேகமாக முன்னேறி வருவதாகவும், எந்த வித இயற்கை அசம்பாவிதம் நடக்காமலும், செழிப்பாகவும், மக்கள் எந்த இடையூறும் இன்றி அமைதியாகவும் வாழ்கிறார்கள் என்று கேரள மக்கள் கருதுவதால், முருகனுக்கு விரதமிருந்து காவடி எடுத்து கூட்டம் கூட்டமாக வருகின்றனர்.

முருகப்பெருமான் பார்க்கும் திசையில் உள்ள மக்களுக்கே இவ்வளவு நன்மைகள் வரும்போது அவர் தமிழகத்திலேயே குடியிருப்பதால் நம் நாட்டிற்கும் நம் மக்களுக்கும் எவ்வளவு நன்மை என்பதை சொல்லில் சொல்ல முடியாது.

தண்டாயுதபாணியின் இருப்பிடமாக உள்ள பழனி மலை மகத்தானது. ஜாதிபேதம் இன்றி பல்வேறு பிரிவினரும் பெரும் திரளாக அங்கு சென்று பிரார்த்தனை செய்து கொண்டு தங்க ளின் குறைகளுக்கு நிவாரணம் பெறுகிறார்கள். பழனியின் பெருமையைக் குறித்து மெத்தப் பாண்டித்தம் பெற்ற ஒருவர் கூறினார் ‘அபரீத மான பழங்காலத்துப் பொருட்கள், பழக்க வழக் கங்கள், சரித்திரம், புராணக் கதைகள், வீர காவியங்கள், மாபெரும் முனிவரின் கதைகள், இலக்கியங்கள் போன்ற அனைத்தையும் உள் ளடக்கிக் கொண்டு உள்ள இடமே பழனி மலை’.

தமிழ்நாட்டின் கிழக்குப் பகுதியில், கடல் மட்டத்தில் இருந்து சுமார் 1500 அடி உயரத்தில் உள்ள பெருமை மிக்க இடமான சிவகிரி மலையில் தண்டாயுதபாணி பழனி ஆண்டாவராக வீற்று உள்ளார். புராதான காலத்தின் துவக்கம் முதலே சித்தர்களும், முனிவர்களும் பழனி மலையில் தவம் இருந்ததினால் அந்த இடம் இன்னும் அதிகப் புனிதத் தன்மையை அடைந்தது.

சைவ சித்தாந்தக் கூற்றின்படி ஒருவர் ஞான உபதேசத்தைப் பெரும் முன்னர் வளர்ச்சி அடைந்து கொண்டே இருக்கும் ஆன்மாவின் நான்கு பகுதிகளைக் கடக்க வேண்டும். அவை ‘கார்யா’ எனும் தன்னலமற்ற சேவை, சாதனாக்களை துதிக்கும் ‘கிரியா’ என்பது, ஒரு குருவின் துணையோடு தியானிக்கும் ‘யோகம்‘, மற்றும் ஆத்மார்த்தமாக தன்னை உணர்ந்து கொள்ளுதலான ‘ஞானம்‘ என்பது.

ஒருவனுக்கு ஞானம் கிடைக்க வேண்டும் எனில், ஒரு முட்டையில் இருந்து புழுவாகி, புழுவில் இருந்து வளர்ச்சி பெற்ற கூட்டுப் புழுவாகி, வளர்ச்சி பெற்ற கூட்டுப் புழுவில் இருந்து கம்பளிப் பூச்சியாகி, கம்பளிப் பூச்சியில் இருந்து வண்ணத்துப் பூச்சியாகி பறப்பதைப் போல படிப்படியாக ‘கார்யா’, ‘கிரியா’, ‘யோகா’ போன்ற நிலைகளைக் கடந்து ‘ஞான’ நிலையை எட்ட வேண்டும்.

பழனி தண்டாயுதபாணி ஞானத்தை பிரதிபலிக் கின்றார். ஞானமே பேரானந்த மன நிலையான ஞானப் பழம் என்பதை நமக்குத் தரும். இளம் பிஞ்சு காயாகி பல்வேறு நிலைகளை கடந்து பழுக்கத் துவங்கி கடைசியாக பழமாவதைப் போலவே பழனி முருகனும் கவர்ச்சிகரமான முகப் பொலிவுடன் இருந்து கொண்டு பக்தர்களுக்கு பல்வேறு காட்சிகளிலும், ரூபங்களிலும் தரிசனம் தந்து கொண்டு அருள் மழையைப் பொழிந்தவாறு இருக்கின்றார்.

தண்டாயுதபாணி ஆலயம் தனி மகத்துவம் பெற்றது. மற்ற ஆலயங்களுடன் அதை ஒப்பிடும் போது அவற்றில் இருந்து இது வேறுபட்டு உள்ளது நன்கு தெரியும். பழனி ஆலயத்தில் உள்ள மூலவர் சிலை நவபாஷ்யம் என்ற பொருளினால் செய்யப்பட்டு உள்ளது. சமஸ்கிருதத்தில் ‘நவ’ என்பதற்கு இரண்டு அர்த்தங்கள் உள்ளன. ‘நவ’ என்றால் ‘புதியது’ அல்லது ‘ஒன்பது’ என்ற அர்த்தங்கள் உள்ளன. அது போலவே ‘பாஷணம்‘ என்றால் ‘விஷம்‘ அல்லது ‘தாதுப் பொருட்கள்’ என்ற இரண்டு அர்த்தங்கள் உள்ளன. பழங்காலத்திய இலக்கியங்களை ஆய்வு செய்த ஆராய்ச்சியாளர்கள் அந்த நவ பாஷண சிலையை செய்தவர் சித்த முனிவரான ‘போகர்’ என்று கருத்து தெரிவித்து உள்ளார்கள்.

அங்குள்ள மூலவரின் சிலை நவபாஷணங் களினால் செய்யப்பட்டு உள்ளது. அதை மிகவும் நுண்ணியமாக ஒன்பது விஷப் பொருட்களின் கலவையினால் செய்து

# சித்தர்களின் தலைவன் நந்திதேவர்



**சிஷ்யர்கள்**

1. மாலாங்கன்
2. இந்திரா
3. குசாமா
4. பிரும்மா
5. ருத்ரா
6. கந்துரு
7. திருமூலர்

திருமூலர் → சிஷ்யர் 1 (கலங்கி கஞ்சமலையான்), சிஷ்யர் 2, சிஷ்யர் 3, சிஷ்யர் 4, சிஷ்யர் 5

கலங்கி கஞ்சமலையான் → சிஷ்யர் 1 (அகோரர்), சிஷ்யர் 2 (மல்லிகை தேவர்), சிஷ்யர் 3 (நந்தாநந்தர்), சிஷ்யர் 4 (பரமாநந்தர்), சிஷ்யர் 5 (**போகர்**)

உள்ளார். அந்த ஒன்பது நச்சுத் தன்மைக் கொண்ட பொருட்களும் ஒன்றாகியபோது உடைக்க இயலாத பலம் மிக்க பொருளாக மாறியதும் அல்லாமல் பல வியாதிகளை குணப்படுத்தும் ஒருவித மருத் துவத் தன்மைக் கொண்ட பொருளாகவும் மாறி இருந்தது. அதற்குப் பின்னரே அந்தக் கலவை யில் செய்த பொருளில் மூலவருடைய சிலை செய்யப்பட்டு உள்ளது. உண்மையில் கூற வேண்டுமானால் முருகனே மருந்தாகவும், மருந்தே முருகனாகவும் மாறியது.

அப்படிப்பட்ட ஒரு கலவையில் ஒரு சிலையை வடிவமித்து இருப்பதில் இருந்தே சித்த முனிவரான போகர் ரசவாத கலவைகளில் கைதேர்ந்தவர் என்பது மட்டுமல்ல, தொலைதூர கண்ணோட்டத்துடன் பின்னர் வர உள்ள காலத்து முருக பக்தர்களின் உடல் நலனில் பெருமளவு அக்கறை கொண்டு இருந்தவர் என்றும், அவர் மிக உயர்வான தெய்வீக நிலையில் இருந்தவர் என்றும் தெரிய வந்துள்ளது.

அந்த முனிவருடைய சித்தர் பரம்பரை பற்றியும் இலக்கியங்களில் இருந்து அறிந்து கொள்ள முடிகின்றது. சித்தர்களின் தலைவராகக் கருதப்படுபவர் சிவபெருமானின் வாகனமான நந்தி தேவரே. அவருடைய ஏழு சிஷ்யர்களில் 'திருமூலர்' என்பவர் உண்டு. அந்த திருமூலருக்கு 'கலங்கி கஞ்சமலையான்' என்ற சிஷ்யர் இருந்தார். அந்த கலங்கி கஞ்ச மலையானுக்கு ஐந்து சிஷ்யர்கள் இருந்தார்கள். அந்த ஐந்து சிஷ்யர்களில் ஒருவரே 'போகரும்'' ஆவார். இப்படியான சிஷ்ய பரம்பரைக் காட்டும் வரைபடம் தனியாக கொடுத்துள்ளோம்.

போகரைப் பற்றிய அனைத்து செய்திகளும் திருமூலர் எழுதி உள்ள திருமந்திரம் என்ற நூலில் உள்ளன. திருமூலர் சைவ சித்தாந்திற்கு ஒரு தூணைப் போன்றவர். அவரே சைவ சித்தாந் திகளுக்கு தெய்வீக மார்கத்தில் இணைந்து, ஆத்மா ஞானத்தைப் பெற்று இறைவன் பாதத்தில் இணைந்து விடும் வழிமுறைகளை காட்டியவர். நவபாஷணப் பொருட்களில் கலவையைக் கொண்டு தயாரித்த முருகன் சிலையை வடிவமைப்பதிலும் போகர் வித்தியாசமான வழிமுறைகளைக் கையாண்டு உள்ளார்.

சாதாரணமாக அனைத்து ஆலயங்களிலும் காணப்படும் முருகன் சிலைகள் அழகிய இளைஞரைப் போல தோற்றம் உள்ளதாகவும், கிழக்கு நோக்கிப் பார்த்தவாறும் அமைக்கப்பட்டு இருக்கும். ஆனால் பழனியில் உள்ள முருகனின் சிலையோ மெல்லியதாகவும், மொட்டைத் தலையுடனும், காவி உடை அணிந்தபடியும், சாமியார் கோலத்திலும் கையில் தன்டாயுதத்தை ஏந்திக் கொண்டு தெற்கு நோக்கிப் பார்த்தபடி அமைக்கப்பட்டு உள்ளது. 'நானே முதிர்ச்சி உள்ள அறிவுப் பழம்' என்பதை பறை சாற்றிக் கொண்டு நிற்பது போல அமைந்து உள்ளது.

அங்கு வரும் பக்தர்கள் பக்தி பெருக மூலவருக்கு செய்யும் அபிஷேகங்களினால் அந்த சிலை எந்த விதத்திலும் பாதிக்கப்படவில்லை என்பது ஒரு ஆச்சர்யமான செய்தியாகும். கிருத்திகை தினங்களில் ஆயிரக்கணக்கான அர்ச்சனைகள் செய்யப்படுகின்றன. அத்தனை அர்ச்சனை மற்றும் அபிஷேகம் செய்தும் அவற்றி னால் எந்தவிதமான பாதிப்பும் அடையாமல், அந்த நவபாஷண சிலை இன்னும் பொலிவுடன்தான் உள்ளது.




ஒரு சில சுயநலவாதிகளால், சித்த வைத்திய தேவைக்காக நவபாஷண முருகனின் சிலையின் கால் பகுதி சுரண்டப்பட்டு, சிலை விழுந்து விடும் அளவிற்கு மிக மோசமாக போனபின் கவலையுற்ற தமிழக அரசு 1983–84 ஆம் ஆண்டுகளில் பழனியில் உள்ள அந்த பெருமை வாய்ந்த சிலை மேலும் பழுதாகி விடாமல் பாதுகாக்கப்பட வேண்டும் என தீர்மானித்து பல யோசனைகளைப் பரிசோதித்தது.

அந்த சிலையை மாற்றி விடலாமா என்று கூட ஒரு கட்டத்தில் யோசனை செய்யப்பட்டது. ஆனால் அதிலும் ஒரு பிரச்சனை இருந்தது. அகம விதிப்படி ஆலயங்கள் பன்னிரண்டு வருடங்களுக்கு ஒருமுறை புதுப்பிக்கப்பட்டப் பின் அந்த ஆலயத்தில் கும்பாபிஷேகம் செய்ய வேண்டும்.

அப்படி செய்தப் பின் முதலில் பிரதிஷ்டை செய்து வைக்கப்பட்டு இருந்த அதே சிலையை அது முன்னர் இருந்த இடத்திலேயே வாய்க்க வேண்டும். ஆனால் அதற்குப் பதிலாக பழுதடைந்த சிலையை மாற்றி அதற்குப் பதி லாக அதே மாதிரியான சிலையை செய்து அதே இடத்தில் பிரதிஷ்டை செய்யப்பட்டு வைக்கப்பட்டு உள்ளதான முன் உதாரணம் எதுவும் இல்லை. அப்படிப்பட்ட நிகழ்வுகள் எந்த ஆலயத்திலும் நடைபெற்றது இல்லை.

கற்பாறைகளில் செய்யப்பட்ட சிலைகளைக் கூட ஆலயங்கள் பழுது பார்க்கப்பட்டபோது தற்காலிகமாக அதே ஆலயத்தில் எங்காவது ஒரு பகுதியில் கொண்டு போய் வைத்து இருந்து , ஆலய வேலைகள் முடிந்தப் பின் அதே சிலையை அஷ்டபந்தனங்கள் செய்தப் பின் (வெண்ணையில் சில மூலிகைகளை கலந்து பசைப் போல தயாரித்து அந்த சிலை முழுவதையும் பூசுவதே அந்த நிகழ்ச்சி) முதலில் இருந்த இடத்திலேயே சிலையை கொண்டு போய் வைத்து விட்டு அதை மீண்டும் பிரதிஷ்டை செய்து விடுவார்கள். ஆனால் மூலவர் சிலையையே மாற்றி அமைத்து உள்ளதான சரித்திரமே எந்த ஆலயங்களிலும் கிடையாது.

பழனியில் ஏற்பட்ட பிரச்சனையின் வடிவமோ இன்னும் வித்தியாசமானது. மூலவர் சிலை பல மூலிகைகளைக் கொண்டு விசேஷமான கலவையில் தயாரிக்கப்பட்டு வியாதிகளை குணப்படுத்தும் மருத்துவ குணம் கொண்ட

சிலையாக வரும்கால சந்ததியினரின் உடல் நலத்தை மனதில் கொண்டு தெய்வாம்சம் கொண்ட 'போகரால்' செய்யப்பட்டு உள்ளது. அதை தயாரித்த விதமோ, அல்லது அந்த மூலிகைகளின் கலவையின் அளவோ

## தாலாட்டு

அறுபடை வீடுகளில்
ஒன்றாக திகழ்வது பழநி.
இந்த புண்ணியதலத்தில்
உள்ள பள்ளியறையில்
முருகப்பெருமானின்
திருப்பாதங்கள், தொட்டில்
போன்ற ஊஞ்சலில் வைக்கப்படும்.
அதைத் தொடர்ந்து ஓதுவார்
தாலாட்டு பாடலைப் பாடுவார்.
குழந்தைகளை துவங்கச் செய்வது
போல் முருகப் பெருமானையும்
தொட்டிலில் கிடத்துவதாக
ஐதீகம் கூறப்படுகிறது. தினமும்
காலையில் நடை திறந்தது
முதல் அனைத்து பூஜைகளும்,
முடிந்ததும், இரவில் படை
சாத்தப்படுவதற்கு முன்பாக
இந்த நிகழ்வு நடத்தப்படுகிறது.
பழநி மலையில் பாலகனாக
முருகப்பெருமான் வீற்றிருப்பதால்
இவ்வாறு செய்யப் படுகிறது.
முருகன் தாலாட்டுக்கு பிறகு
பள்ளியறைக் கதவுகள் மூடப்படும்.

எவருக்கும் தெரியாது. முதல் நாள் இரவு நல்ல சந்தனத்தை அரைத்து பசைப் போல செய்து அதை அந்த சிலை மீது பூசி வைத்த பின் மறுநாள் எடுத்தால் அது வேறு ஒரு மருத்துவக் குணம் கொண்டப் பசையாக மாறி வியாதிகளை தீர்க்கும் முறையில் மாறி விடுவதினால் அந்த சிலை மீது ஊற்றப்படும் தண்ணீரைக் குடித்தால் பல நாள்பட்ட நோயும் விலகுகின்றன என மக்கள் கருதினார்கள். அதற்கு விஞ்ஞானபூர்வமான ஆதாரம் உள்ளது என ஆலயம் வெளியிட்டு உள்ள புத்தகக் குறிப்பில் காணப்படுகின்றது.

ஒரு சாரரின் கருத்துப்படி அந்த சிலையில் உள்ள பொருட்களில் லட்சக்கணக்கான சில கிருமிகள் உள்ளன என்றும், அவற்றில் சில அபிஷேக நீருடன் கலந்து வெளியேறுவதினால் அதைப் பருகும் மக்களின் உடலில் உள்ள தீய அணுக்கள் மடிந்து வியாதிகள் வெளியேறுகின்றன என நம்புகின்றனர்.

அந்த அபிஷேகப் பொருட்கள் பலநாட்கள் பத்திரமாக வைக்கப்பட்டு சித்த மருந்துகளாக பயன் படுத்தப்பட்டு வந்துள்ளது. அதனால்தானோ என்னவோ பழனி மலை அடிவாரங்களிலும் அதன் சுற்றுப் புறங்களிலும் பல சித்த மருத்துவசாலைகள் பரவி உள்ளன

பழனி தண்டாயுதபாணியே முதல் மருத்துவராக விளங்குவதினால் அந்த மூலவர் சிலையை மாற்றி அமைக்கலாம் என்ற யோசனையை எவரும் ஏற்றுக் கொள்ளவில்லை.

அதனால் மூலவரை தற்போது மிகவும் பத்திரமாக பாதுகாக்கும் பொருட்டு அபிஷேகம் செய்வது, ஆரத்தி காட்டுவது என்பதில் பல்வேறு கட்டுப்பாடுகள் விதிக்கப்பட்டுள்ளது.

போகர் உருவாக்கிய மூன்று முருகன் சிலைகளில் ஒன்று மட்டும் பழனில் உள்ளதை நாடறியும் போது, மற்ற இரண்டை ஏதோ சில பல காரணங்களால் போகரே மறைத்து வைத்ததாகவும் புராணங்கள் கூறுகின்றது. ஒருவேளை பழனி முருகனைப் போல அந்த இரண்டு சிலைகளையும் வெளிப்படையாக பிரதிஷ்டை செய்திருந்தால், நவபாஷாணத்தின் மதிப்பு மக்களுக்கு தெரியாமல் வியாபார நோக்கத்திற்காக அவை கண்டிப்பாக அழிக்கப்படும் என்பதை முன்கூட்டியே போகர் அறிந்திருந்த காரணத்தால்தான் அந்த இரண்டு சிலைகளையும் மறைத்து வைத்துவிட்டதாக கூறப்படுகிறது.

இந்து மதத்தில் மட்டும்தான் கடவுளுடன் சேர்த்து அந்த கடவுள் குடியிருக்கும் இடத்திற்கும் பல சிறப்புகள் அமைந்திருக்கும். அந்த வகையில் பழனி முருகனை வணங்குவதுடன் மருத்துவ ஊரான பழனியையும் வணங்குவோமாக.





விளம்பரங்கள் வரவேற்கப்படுகிறது
உலகின் முதல் மெயில்
புத்தகமாக வெளிவரும்
நமது மாதமிருமுறை இதழுக்கு
விளம்பரங்கள் வரவேற்கப்படுகிறது
முழு பக்க விளம்பரம் ரூ.5,000
அரைப்பக்க விளம்பரம் ரூ.2,500
விளம்பர ஏஜெண்ட்களுக்கு
சிறப்பு சலுகைகள் வழங்கப்படும்
மேலும் விபரங்களுக்கு
8939499598 9677159070 7299992699
நிர்வாக அலுவலகம் aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம், சென்னை 600024
தவறாமல் படியுங்கள்
www.aanmeegamalar.com



# ஆன்மிக பாதைக்கு உதவும் விருப்பங்கள்

ஆன்மிக கண்ணோட்டத்தில் நம்முடைய விருப்பம், அடுத்தவர்கள் விருப்பம், கடவுளின் விருப்பம் ஆகியவற்றை பற்றிய விளக்கம்

பொருள் விளக்கம்

இச்சா என்ற வார்த்தைக்கு சமஸ்கிருதத்தில், விருப்பம் என்று அர்த்தம். அது போல,

**ஸ்வேச்சா:** 'ஸ்வ' என்றால் நான் அல்லது என்னுடையது என்று அர்த்தம். ஒருவர் ஸ்வேச்சா நிலையில் இருக்கும் போது, நடப்பது எல்லாம் தன்னுடைய விருப்பப்படி நடக்க வேண்டும் என எண்ணுவார்.

**பரேச்சா:** 'பர' என்றால் அடுத்தவர் என்று அர்த்தம். ஒருவர் பரேச்சா நிலையில் இருக்கும் போது நடப்பது எல்லாம் அடுத்தவர் விருப்பப்படி நடக்க வேண்டும் என எண்ணுவார்.

**ஈஸ்வர்இச்சா:** 'ஈஸ்வர்' என்றால் கடவுள் என்று அர்த்தம். ஒருவர் ஈஸ்வர்இச்சா நிலையில் இருக்கும் போது, நடப்பது எல்லாம் கடவுளின் விருப்பம் என்று எண்ணுவார்.

ஆன்மீக பயிற்சி மற்றும் வளர்ச்சியில் நம்முடைய விருப்பம், அடுத்தவர்கள் விருப்பம், கடவுளின் விருப்பம் ஆகியவற்றை பற்றிய விளக்கம் :

நாம் எல்லோரும் நம்மை நம் உடல் (ஐம்புலன்கள்), மனம் மற்றும் புத்தி கொண்டே அறிகின்றோம்.

இதை நம்முடைய அகங்காரம் என்றும் சொல்லலாம். ஆனால் நம்முடைய உண்மையான சுபாவம் என்பது நம் ஆன்மா அல்லது நம்முள் இருக்கும் இறை தத்துவம் என்று ஆன்மீகம் நமக்கு கற்றுத் தருகிறது. ஆன்மாவின் இயல்பு பேரானந்தத்தில் இருப்பது அதாவது ஆன்மா என்பது நம்மை உச்சக் கட்ட பரமானந்த நிலையை அடைய ஊக்கம் அளிக்கக்கூடியது,

ஆன்மீக பாதையின் முக்கிய குறிக்கோள் என்னவென்றால்

நம் உடல் (ஐம்புலன்கள்), மனம் மற்றும் புத்தியுடன் தொடர்புடைய நம்முடைய அடையாளத்தை குறைத்து பின் இறுதியில் கரைப்பது.

நம்முள் இருக்கும் இறை தத்துவத்தை அடையாளம் கண்டு பின் அனுபவிப்பது.

ஆன்மீக பயிற்சியின் பகுதியாக நம்முடைய விருப்பத்திலிருந்து அடுத்தவர்களின் விருப்பம் பிறகு இறுதியில் கடவுளின் விருப்பம் என்று முன்னேறுவதே இதை அடைய ஒரு வழி.

நாம் செய்யும் எல்லா செயல்களும் நம் ஐம்புலன்கள்,மனம்,புத்தி இவை கொண்டு நமக்கு எப்படி தேவையோ அப்படி செய்கின்றோம். இது போல் ஆசைகலை கைவிட முடியாமல் அவற்றின் பின்னே சென்றோமானால் நாம் யார் என்று தெரியாமலும் நம் ஆன்மாவை அனுபவிக்க முடியாமலும் தவறி விடுவோம். இவ்வாறு நம் விருப்பம் போல் வாழ்வது என்பது மிருகங்களை போல் வாழ்வதற்கு சமம்; அடுத்தவர்களைப்பற்றி நாம் கவலைப்படுவதே இல்லை.

நமது ஆன்மீக பாதையில் எல்லோரும் சொல்வது போல் நமது விருப்பத்தை அலட்சியப் படுத்தினாலே அதனுடைய தாக்கம் குறையும், அடுத்தவர்கள் சொல்வதை கேட்டு அதன்படி நடந்தால் நாம் நமது விருப்பத்தை தானாகவே குறைத்தும் தவிர்த்தும் விடுவோம் , நமது பழக்கத்தை அடுத்தவர்கள் விருப்பம் போல் நடக்க பழகி கொண்டால், நமக்குள் இருக்கும் நமது அகங்காரம் குறைந்து விடும்(அதாவது நம் ஐம்புலன்கள்,மனம், புத்தி)

அடுத்தவர்கள் விருப்பம் பற்றி நினைக்கும் ஒருவரின் உதாரணத்தை பார்ப்போம்:

ராமுவும், நிர்மலாவும் தம்பதியர்கள், ஓர் வெள்ளிக்கிழமை இரவு இருவருக்கும் வெவ்வேறு விஷயங்கள் செய்ய விருப்பம் இருந்தது. நிர்மலாவுக்கு இசைக் கச்சேரிக்கும், ராமுவுக்கு கால்பந்து விளையாட செல்லவும் ஆசை இருந்தது. ஆன்மீக பாதையில் இருக்கும் ராமுவுக்கு அடுத்தவர்கள் விருப்பத்திற்கு மதிப்பு தருவதுப் பற்றி தெரியும், அதனால் ராமு தனக்கு பிடித்த கால்பந்து விளையாட்டை தவிர்த்து நிர்மலாவுடன் இசை கச்சேரிக்கு சென்றான்.

இத்தகைய நடத்தையால் ராமு ஆன்மீக பாதையில் முன்னேறுகிறான். ஏனெனில் அவன் தன்னோட ஐம்புலன்கள், மனம் மற்றும் புத்தியால் எழும் தன் சொந்த விருப்பத்தை இந்நிகழ்வில் தவிர்த்தான்.

உண்மையாக ஆன்மீகம் பின்பற்றுவது என்பது அடுத்தவர்கள் விருப்பம் தான் தன் விருப்பம் என்று நினைத்து தன்னை மாற்றி கொள்வது.

முறைப்படி தொடர்ந்து ஆன்மீக பயிற்சியை அதிகரிப்பதோடு அடுத்தவர்கள் எண்ணத்திற்கு மதிப்பு கொடுக்கும் போது, நம் ஐம்புலன்கள், மனம், புத்தியுடன் தொடர்புள்ள நம் அடையாளம் நாளடைவில் கரைந்துவிடும். இத்தறுவாயில் வெளிப்பட்ட ரூபத்தில் குரு நம் வாழ்வில் வருவார். குருவுக்கு விஸ்வ மனம் மற்றும் விஸ்வ புத்தியை அணுகி இறைவனின் விருப்பப்படி செயல் ஆற்ற முடியும். அவர் சொல்வதை கேட்டு அவர் அறிவுறுத்தல் படி செயல்பட்டால் அது ஒருவன் கடவுளின் விருப்பம் போல் நடப்பதாகும். ஒருவனின் அகங் காரம் தேவையான அளவு கரைந்தபின் (அதாவது ஒரு மகானின் நிலை) அவன் நேரடியாக விஸ்வ மனம் மற்றும் விஸ்வ புத்தியை அணுக முடியும். பின் நேரடியாக இறைவனின் விருப்பப்படி செயல் ஆற்ற முடியும். இறைவனின் விருப்பம் போல் நடப்பதால் நம் முள்இறைவனை உணரமுடியும்.

அடிக்கடி இக்கருத்தை பற்றி கேட்கப்படும் கேள்விகள்

**அடுத்தவர்கள் விருப்பத்திற்கு நாம் எவ்வளவு தூரம் மதிப்பு கொடுத்து நடப்பது?யாராவது நம்மை தவறான விஷயத்தை செய்ய சொன்னால், அவர்கள் விருப்பத்திற்கு மதிப்பு கொடுப்பதா? அல்லது நம் சுய புத்திக் கொண்டு இல்லை என்று சொல்வதா?**




ஆன்மிகமலர் .காம்
ஆன்மிகத் தேடலின் புதிய அடையாளம்!
1-15 பிப்ரவரி 2017 13
www.aanmeegamalar.com

**பதில்:** அடுத்தவர்கள் விருப்பத்திற்கு மதிப்பு கொடுப்பது என்பது நம் ஆன்மீக பயணத்திற்கு அது தடங்கல் ஏற்படுத்தும் என்றால் அடுத்தவர்கள் விருப்பத்திற்கு மதிப்பு கொடுக்க தேவையில்லை என்பதை மனதில் கொள்ள வேண்டும். அவர்கள் சொல்வது 50% சரியாகவும் 50% தவறாகவும் இருந்தால் அடுத் தவர்கள் விருப்பம் போல் நடப்பதில் தவறில்லை. ஆன்மீக கண்ணோட்டத்தில் அடுத்தவர்கள் விருப்பத்திற்கு மதிப்பு கொடுத்து நடப்பதன் நோக்கம் நான் என்ற அகங்காரம் குறைய வேண்டும் என்பதற்காகத்தான். இந்த நோக்கம் உலக வாழ்க்கை கண்ணோட்டத்தில் அல்ல.

**அடுத்தவர்கள் விருப்பம் போல் நடப்பது வீட்டிலுள்ள குடும்ப உறுப்பினர்களிடம் மட்டுமா? அல்லது வெளி நபர்களிடமும் அதே போல் நடந்து கொள்ள வேண்டுமா?**

**பதில் :** நமது ஆன்மீக பாதையில் தடங்கல் ஏற்படாதவரை சந்தர்ப்பம் கிடைக்கும் போது அடுத்தவர்கள் விருப்பம் போல் நடக்க வேண்டும்

உதாரணத்திற்கு, யாராவது நம்மிடம் வந்து அவர்கள் விருப்பம் போல் தினமும் சினிமாவிற்கு செல்ல சொன்னால் நாம் நம்மை கட்டுப்படுத்தி தவிர்த்து விட வேண்டும். ஏனெனில் தினமும் சினிமாவிற்கு செல்வது என்பது நடைமுறை வாழ்க்கைக்கும் ஆன்மீக பாதைக்கும் ஒத்து வராது. ஆனால் நமது நண்பர் எப்பொழுதாவது நம்மை சினிமாவிற்கு கூப்பிட்டால் அது நம் நேரத்தை விரயம் செய்தாலும் நாம் செல்ல வேண்டும் ஏனென்றால் நாம் அடுத்தவர் விருப்பத்திற்கு மதிப்பு கொடுக்க வேண்டும்.

**உண்மையாக ஆன்மீகம் பின்பற்றுவது என்பது அடுத்தவர்கள் விருப்பம் தான் தன் விருப்பம் என்று நினைத்து தன்னை மாற்றி கொள்வது**

**நம்மை கட்டுப்படுத்தியும் கோபத்தை அடக்கியும் அடுத் தவர் விருப்பத்திற்கு மதிப்பு கொடுத்தால் என்ன நடக்கும்?**

அடுத்தவர் விருப்பத்திற்கு மதிப்பு கொடுப்ப தால் உள்ள ஆன்மீக பயன்களை, ஒருவர் புரிந்து கொள்ள வேண்டும். சில நேரங்களில் அறிவு பூர்வமாக உணர்ந்து இருந்தாலும் சந்தர்ப்ப சூழ்நிலைக்கேற்ப எதிர்ப்பும் எதிர்மறை எண்ணங்களும் தோன்றும். இதை வெல்ல ஒருவர் சுய ஆலோசனை வழங்க வேண்டும்.

மேலும் விவரங்களுக்கு: www.ssrf.org;
தொடர்பு: 9380949626

## முன்னோர்களின் அறிய கண்டுபிடிப்பு டி.என்.ஏ.



அதிகாலையில் அரசமரத்தை சுற்றும் குழந்தை இல்லாத பெண்கள் அனைவரும் அங்கு வெளிப்படும் வாயுவை சுவாசிப்பதோடு மட்டுமில்லாமல் மனித செல்லினுள் காணப்படும் DNA வின் பின்னிய ரிப்பன் வடிவத்தை (double helix) மனதில் கற்பனை செய்துகொண்டால் முழுமையான கர்ப்பத்திற்கான சாத்திய கூறுகள் அதிகரிக்க கூடும்.

இதை கருத்தில் கொண்டு தான் நம் முன்னோர்கள் அந்த நாக தேவதை கற்சிலையை அரசமரத்தின் அடியில் வைத் துள்ளார்கள் 'போல'. ஒவ்வொரு சுற்றிலும் அந்த சிலையை தொட்டு வணங்கும் பொழுது DNAவின் வடிவம் அவர்களின் மனதை ஆட்கொள்ளும் அல்லவா.

இது பல தலைமுறைகள் தாண்டிய நம் முன்னோர்களின் ஆச்சரிய பட வைக்கும் அறிவியல் சார்ந்த அனுமானம்.

இந்த கற்சிலையில் காணப்படும் வடிவமானது, போலந்தை சேர்ந்த அறிவியல் விஞ்ஞானிகள் வாட்சன் மற்றும் கிரிக் கண்டறிந்த DNA வின் இரட்டை வலை பின்னல்(double helix) வடிவத்திற்கு முழுவதுமாக ஒத்துபோகிறது. இந்த நூற்றாண்டின் ஒரு மிகபெரிய கண்டு பிடிப்பிற்காக அவர்களுக்கு நோபெல் பரிசும் வழங்க பட்டுள்ளது.

இதற்கு மற்றும் ஓர் விளக்கம் உண்டு... சித்தர்கள் வழி பாட்டு முறையில் இடகலை பிங்கலை மற்றும் இவை இணைந்து பிணைந்து கபாலத்தில் விரிவதை... (அவ்வைப் பாட்டியின் வினயாகர் அகவலில் கூறியது போன்று சுழு முனை மார்க்கம் ) என்பதை விளக்குவதே இந்த வழிபாட்டின் அர்த்தம். நம் உடலில் உள்ள இவைகளை அடக்கி ஆள தெரிந்தாலே எல்லா நோய்களில் இருந்தும் விடுதலை கிடைக்கும்...





# எதிரிகளிடமிருந்து காத்தருளும் பைரவர்

பழங்காலம் முதல் நவீன காலம் வரை எதிரிகள் இல்லாதவர்களை பார்த்திருக்கவே முடியாது. இதற்கு எந்த கடவுளை வழிபட்டால் சிறப்பு என்பதை பார்ப்போம்!

பில்லி, சூனியம் மற்றும் தாங்க முடியாத அளவிற்கு எதிரிகளால் துன்பம் அடைபவர்களையும், விபத்து, துர்மரணம் இவற்றிலிருந்தும் காப்பவர் பைரவர் தான்.

எதிரிகளால் துன்பப்படுபவர்கள் அத்துன்பம் நீங்கும் வரை பைரவரிடம் பிரார்த்தனை செய்து கொண்டு உங்கள் பிரார்த்தனை நிறைவேறும் வரை ஒவ்வொரு சனிக்கிழமையும் காலை 6 மணி முதல் மாலை 8 மணிக்குள் அல்லது கோவில் நடை சாத்துவதற்குள் வெண்பூசணியில் பைரவருக்கு விளக்கு போட வேண்டும்.

64 பைரவர்களில் எந்த பைரவருக்கு வேண்டுமானாலும் எந்த நேரத்தில் வேண்டுமானாலும் விளக்கு போடலாம். இதை செய்ய முடியாதவர்கள் தினமும் சாதாரணமான விளக்கு போடலாம், அதுவும் முடியாதவர்கள் வாரத்தில் ஒரு நாள் மட்டும் சாதாரணமான விளக்கு 7 விளக்கு போடலாம்.

பில்லி சூனியம் பிரச்சனைகள் நீங்க பைரவருக்கு மிளகாய் மாலை போட்டு வழிபாடு செய்து வந்தால் இந்த பிரச்சனைகள் அகலும்.

ஸ்ரீபைரவரிடம் பிரார்த்தனை செய்து, அது நிறைவேறியதும் சிறு துணியில் மிளகாயை மூட்டை போல் கட்டி, மாலையாகச் சார்த்தி, நேர்த்திக்கடனைச் செலுத்தலாம். மேலும் ஐந்து வகை எண்ணெய் கொண்டு தீபமேற்றி வழிபடலாம்.

மற்ற பிரச்சனைகளுக்கு :

மற்ற பிரச்சனைகளுக்கு தாமரைப்பூ மாலை, வில்வ மாலை, தும்பைப்பூ மாலை, சந்தன மாலை ஆகியவை பைரவருக்கு வைத்து வழிபடலாம். வாசனைப் பு+க்களில் மல்லிகைப்பூவை தவிர்த்து மற்ற அனைத்து பூக்களும் பைரவருக்கு சமர்ப்பிக்கலாம்





# புகை பழக்கத்தை விட உதவும் யோகப் பயிற்சி

புகை பழக்கம் உள்ளவர்கள், அதனை விட நினைக்கும் போதெல்லாம் பல பிரச்சனைகள் சிந்திக்கிறார்கள். விட முடியாமல் தவிப்பார்கள், கவனம் அதிகமாக சிதறும், படபடப்பு, ஓய்வின்மை, பதட்டம், எரிச்சல், சிந்தனை சிதறும், பசியின்மை, உடல் எடை அதிகரிக்கும். ஒருவர் போதையில் இருந்து வெளிப்பட நினைக்க நினைக்க அதனால் பிரச்சனை வலுத்துக் கொண்டே போகுமே தவிர, தீர்வு இருக்காது. பல நேரங்களில் பிரச்சனையை சரி செய்ய ஒரு போதையில் இருந்து மற்றொரு போதைக்கு மாறிவிடுவார்கள். சனாதன் கிரியாவில் பயிற்சி மூலமாக போதை பழகங்களில் இருந்து முழுமையக வெளிவர முடியும். பலரும் இதனால் பயன் அடைந்துள்ளனர்.

தொடர் புகையிலை பழக்கம், ரத்த நாளங்களை சுருங்க செய்து , ரத்த ஓட்டத்தை பாதிக்கும். ரத்த நாளங்களையும் , ரத்த ஓட்டத்தையும் சரி செய்ய உடம்பில் பிராண சக்தி முக்கியம். பிராணம் உடம்பில் எல்லா பகுதிகளிலும் பரவ செய்வது நல்லது.

பிராண சக்தியை உள்வாங்கும் பயிற்சியே பிரணாயாமம். பிராணாயாம் செய்ய வஜ்ரா சனத்தில் உக்காருவது சிறந்தது. கண்களை மூடிக்கொண்டு சுவாசத்தை மெதுவாக உள் இழுங்கள். உள் இழுத்த சுவாசம் மூக்கு, தொண்டை வழியாக வயிறு வரை செல்வதை உணருங்கள். வயிற்றில் அடங்கிய சுவாசம் மெதுவாக மீண்டும் தொண்டை, மூக்கு வழியாக வெளியேறுவதை கவனியுங்கள். சுவாசம் உள் இழுக்கும் பொது வயறு விரிவடைய வேண்டும், மார்பு விரிவடையக் கூடாது. தொண்டை குழாயில் கவனம் வைத்து தொண்டை பகுதியின் விசையினால் காற்றை உள் இழுக்கவும். அதேபோல் தொண்டை குழாய் விசையினால் வெளிவிடவும். இது மிகவும் முக்கியம். காற்றை வெளி விடும்போது, வயறு உள் இழுக்கப்படும்.

சுவாசம் உள் இழுக்கும் பொது “சோ” எனும் மந்திரத்தை, வெளிவிடும் போது “ஹம்” என்ற மந்திரத்தை மனதிற்குள் ஒலிக்கவும். பிராணாயாம் தொடரும் போது கண்கள், காகி யோகா முத்தராவிலும், உள் சுவாசத்தின் போது மெதுவாக சாம்பவி யோகா முத்திரைக்கு செல்லவும். வெளி சுவாசத் தின் போது மீண்டும் காகி யோக முத்திரைக்கு மாறவும். காகி கண்கள் இரண்டும் மூக்கின் நுனியை நோக்குதல். சாம்பவி கண்கள் இரண்டும் புருவத்தை நோக்கி இருத்தல்.



இந்த பயிற்சி செய்யும் போது, உங்கள் உள் கவனம் உங்கள் உடம்பில் உள்ள எழு சக்ராவிலும் பயணிக்கும். காகி முத்திராவில் இருக்கும் போது மூலதாரம் சக்ராவிலும், கண்கள் மேலே செல்லச் செல்ல, ஸ்வதிச்டானம், மணிபூரகம், அனாகதம், விஷுத்தி, ஆக்யா, கடைசியாக ஷஹஷ்ரா சென்று அடையும். கண்கள் மூடிய நிலையில் இந்த க்ரியாவை செய்தல் அவசியம். ஒரு முறை சுவாசம் உள் இழுத்து வெளிவிடுதல் ஒரு முறை என கணக்கில் கொள்ளப்படும். குறைந்தது எழு முறை செய்ய வேண்டும். கண்களைத் திறக்கும் போது மிகவும் மெதுவாக திறந்து உள்ளகைகளை முதலில் பாருங்கள்.

இந்த கிரியா உடம்பில் பிராண சக்தியை வலுபடுத்தும். உடம்பில் உள்ள புகையிலை நச்சு களையும், போதை உணர்வுகளுக்கு காரணமாக இருக்கும் காரணிகளையும் உடம்பில் இருந்து அகற்றும். தினமும் இந்த கிரியாவை பயிற்சி செய்பவர்கள் எளிதில் புகை பழக்கம் மற்றும் போதையில் இருந்து விடுபடலாம். தர்காலிகமாக அல்ல, நிரந்தரமாக. உங்கள் உணர்வுகளில் உன்னதம் அடைவதையும் நீங்கள் உணர முடியும். இந்த காலங்களில் தண்ணீர் மற்றும் பழங்கள் அதிகமாக உட்கொள்ளவும். புகை ஞாபகம் வரும்போது, கரும்பை மெல்வது தற்காலிக தீர்வு.

சனாதன் கிரியா பயிற்சி எல்லா வித இடர் பாடுகளில் இருந்து விடுதலை அளிக்கும்.யோகி அஷ்வினிஜியின் வழிகாட்டுதல் படி இந்திய முழுவதும் தியான் ஆசிரமம் சனாதன் கிரியா யோகா பயிற்சியை இலவசமாக கற்றுக் கொடுக் கிறது.

குரு சிஷ்ய பரம்பரை வழியாக யோகா நெறியை கற்றுக்கொள்ள அணுகவும். அனுமதி முற்றிலும் இலவசம்.
9841430369,
Dhyan Foundation,சென்னை.
www.dhyanfoundation.com



# மட்டை தேங்காயில் ஆவாகனமாகும்

## ஸ்ரீ சத்தியநாராயணா பெருமாள்

திருச்சி மாவட்டம் துறையூர் வட்டம் பச்சைப்பெருமாள்பட்டி கிராமத்தில் உள்ள ஸ்ரீ பூமி நீளா தேவி சமேத ஸ்ரீ சுந்தராஜா பெருமாள் கோவில்(621003) உள்ளது, இக்கோவில் சித்தரை நட்சத்திரம் உரியவரின் வழிபட்டு ஸ்தலம், பிரதி மாதம் பௌர்ணமி தினத்தில் மாலை 6.30 மணிக்கு “ஸ்ரீ சத்யநாராயணர் பூஜை” நடைபெற்று வருகிறது, இப்பூஜையில் பங்கு கொள்வது மூலம் திருமண தடை அகலும், குழந்தை பாக்கியம் கிட்டும், நினைத்த காரியம் கைகூடும், அரசங்க வேலைவாய்ப்பு கிடைக்கும், இப்பூஜையில் விரதம் இருந்து கலந்து கொண்ட பலருக்கும் அரசாங்க வேலை கிடைத்து உள்ளது மேலும் குழந்தை பாக்கியம் கிடைக்க கணவன், மனைவி இருவரும் விரதம் இருந்து பூஜையில் கலந்து கொண்டு இறுதியில் தருகின்ற “நெய்” பிரசாதத்தை உண்டு வந்தால் குழந்தை பாக்கியம் கிடைக்கும். இப்பூஜையில் பக்தர்கள் கொண்டுவரும் காய்ந்த “மட்டை தேங்கயாய்” வைத்து அதில் ஸ்ரீ சத்தியநாராயணா பெருமாளை கோவில் அர்ச்சகர் ஆவாகனம் செய்து கொடுப்பர்.

அதை நமது வீட்டிற்கு கொண்டு வந்து பூஜை செய்தால் மிக விரைவில் நினைத்த காரியம் கைகூடும், இந்த பூஜை கலியுகத்தில் மிக சக்தி வாய்ந்த பூஜை. ஒவ்வொரு வருடம் கார்த்திகை பௌர்ணமியன்று சஹஸ்ர தீபம் 1008 பித்தளை விளக்கில் தீபம் ஏற்றி உற்சவ மூர்த்திகளுக்கு (ஊஞ்சல் சேவையை ) நடைபெறும். இக்கோவில் துறையூர் புளியன்சோலை செல்லும் வழியில் “பச்சைப்பெருமாள்பட்டி” என்னும் கிராமத்தில் அமைத்து உள்ளது.

நாமக்கல் பச்சைப்பெருமாள்பட்டி மற்றும் திருச்சி புளியன்சோலை (காலை 8.45மணிக்கும் மதியம் 1 .00 மணிக்கு சத்திர பேருந்து நிலையத்தில்) இருந்து பேருந்து வசதி உள்ளது.

மேலும் விபரங்களுக்கு
அர்ச்சகர் திரு. ரகுபதி ஐயங்கார்
(9442084316, 8903401310)

ஒவ்வொருவரின் இமெயில் முகவரியை தேடி வரும்

# சடாரி தத்துவம்

பெருமாள் கோவில்களில் சடாரி சாத்துவதும் சிறப்பு. சடாரியின் மேல் இறைவனின் திருவடி பொறிக்கப்பட்டிருக்கும். இதனால் இறைவன் நம்மை ஆள்கிறான் என்ற பவ்யமும் குடிகொள்ளும். அஹங்காரமும் மட்டுப்படும். நம்மாழ்வார் பெருமாள் திருவடிகளை அடைந்தவர் அவரே குருவாக இறைவனின் பாதத்தை நம்மிடம் சேர்பித்து நம்மை உய்விக்கிறார் என்று நம்பிக்கை. நம்மாழ்வாருக்கும் சடகோபன் என்று பெயர். சடாரிக்கும் சடகோபம் என்று வழங்குகிறார்கள். ‘சடை’ என்ற தேவையற்ற விஷயங்களை விலக்குவது, தீர்ப்பது என்று பொருள். பெருமாளுக்கு ஆதிசேஷனை பாதரக்ஷையாக பார்ப்பதால் இதை ஆதிசேஷம் என்றும் சொல்வார்கள்.

சடாரியை பற்றி மேலும் கூறும் போது

சடாரி அல்லது சடகோபம்; அதைக் கொஞ்சம் கூர்ந்து பாருங்க; ஏதோ ஒரு கிரீடம் போல இருக்கும். அதன் மேலே இரு பாதங்கள்! இறைவனின் திருப் பாதங்களை நாம் தேடிப் போகா விட்டாலும் கூட, அவை நம்மைத் தேடி வருகின்றன! நம்மைக் கடைத்தேற்ற! கோவிலுக்கு உள்ளேயும் சரி, வெளியேயும் சரி, இந்த சடாரி கூடவே பய ணிக்கும்! அறியாத சீடன், குருவை மட்டும் எப்படித் தனியாக அறிந்து விட முடியும்?



அவன் குருவை நோக்கிச் செல்ல வேண் டியதில்லை! சீடனை நோக்கிக் குரு தானே வருவார், சீடன் கற்க விழையும் போது! அது போல் ஒரு குரு வருகிறார் நம்மைத் தேடி! நம்மாழ்வாரின் இயற்பெயர் மாறன் சடகோபன்! சடாரிக்குப் பெயரும் சடகோபம் தான்! வைணவ மரபில் அவர் தான் ஆதி குரு! அவர் தான் சடாரியாக வருகிறார் நம்மிடம்! அவரே இறைவனின் சடாரியாக இருந்து, அவன் பாதங்களை, நம்மை நோக்கிக் கொண்டு வந்து கொடுத்து, நம்மை உய்விக்கிறார்! இதுவே சடாரியின் தத்துவம்! சரி, அதற்கு ஏன் கிரீடம் போல ஒரு அமைப்பு?

நம்மைச் சிறப்பித்து, நமக்குத் தலையில் சூட்டினா, உச்சி குளிர்ந்து விடாதா? வெளியில் காட்டிக் கொள்ளாவிட்டாலும், உள்ளே கொஞ் சமாச்சும் புளகாங்கிதம் அடைவோம் அல்லவா?: ) “தலை” மேல தூக்கி வச்சிக்கிட்டு ஆடுறான், “தலை” கால் தெரியலை அப்படின்னு பேச்சு வழக்கில் கூட, எண்சாண் உடம்புக்கு “தலையே” பிரதானம்! என்னா “தல”, சௌக்கியமான்னு தான் நாமளும் கேக்கறோம்! “தலை”யாய ஒன்றுன்னு தானே இலக்கியங்களும் சொல்கின்றன! இப்படிப்பட்ட மனிதனின் தலைக்கு அணிகலனாகத் தான் அந்தக் கிரீடம்!

இப்படிப்பட்ட மனிதனின் தலைக்கு அணிகலனாகத் தான் அந்தக் கிரீடம்!ஆனா கிரீடம் தான் உண்மையான அணிகலனா? இல்லை! அதுக்கு மேலேயும் ஒன்னு இருக்கு! உலகத்தில், தலை மேல் வைத்துக் கொண்டாட வேண்டிய ஒரே பொருள் எது? இறைவனின் திருப் பாதங்கள் தான்!

எண்குணத்தான் தாளை வணங்காத் தலை என்பது தான் வள்ளுவம்! அவன் மலரடிகளைச் சூட்டிக் கொள் வதை விட பெரும்பெருமை வேறெதுவும் இல்லை!





# வாழை இலை சாப்பாடும் சாப்பிடும் முறையும்

இப்போது தட்டிலில் உண்ணும் பழக்கம் வந்துவிட்டது. ஆனால் பெரியோர்கள் உண்பதற்கு இலைகளை பயன்படுத்தச் சொன்னார்கள். இலையில் பல மருத்துவக் குணங்களும் உண்டு.

உணவு பரிமாறுவதற்கு வாழையிலை, பலா இலை, மா இலை, புரசை இலை, புன்னை இலை, மந்தாரை இலை ஆகியவற்றைப் பயன்படுத்தி வந்தார்கள்.

இலையைப் போடுவதற்கும் ஒரு முறை உண்டு.

இடத்தை நன்கு சுத்தி செய்ய வேண்டும். அழுக்கான இடத்திலோ குப்பையைச் சேர்த்து வைத்து அதன் மீதோ இலையைப் போடக்கூடாது. அமர்ந்துதான் சாப்பிட வேண்டும். நின்று கொண்டு சாப்பிடக் கூடாது. இறைவனுக்கு நிவேதனம் (கண்டருளச் செய்தல்) செய்ததையே சாப்பிட வேண்டும். தனித்துச் சாப்பிடக் கூடாது.

“நரக நாசனை நாவில் கொண்டு அழையாத மானிடர் உடுக்கும் கூறையும் உண்ணும் சோறும் பாவம் செய்தன” என்கிறார் பெரியாழ்வார்.

வாழையிலையைப் போடும் போது அதன் அடி வலப்புறம் பொருந்தும்படி போட வேண்டும்.

இலையில் பிரசாதம் படைக்கும் பொழுது, முதலில் பருப்பு, காய்கறி பின்பு பிரசாதம் நெய் படைக்க வேண்டும்.





BRG
bhaanraja graphics
bhaanrajagraphics@gmail.com / bhaanrajagraphics@rediff.com

SPECIALIST IN
* BookWork Designing
* Wrapper Designing
* Layout Designing
* Logo Designing
* Plamphet Designing
* Magazine Design Etc.,

89394 99598

New no.16, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Che- 024.

# ஒவ்வொரு ராசியினர் செய்ய வேண்டிய தான தர்மங்களும் அதனால் கிடைக்கும் பலன்களும்



ஒவ்வொரு ராசிக்காரர்களும் செய்ய வேண்டிய தானங்கள் வரையறுக்கப்பட்டுள்ளன. அதன் விவரம் வருமாறு:

**மேஷம்:** மேஷ ராசிக்காரர்கள் குலதெய்வ வழிபாட்டை தவறாமல் செய்ய வேண்டும். சிவன்கோவில்களுக்கு சென்று வரும்போது வாசலில் உள்ள ஏழைகளுக்கு தவறாமல் தானம் செய்ய வேண்டும். பணக்காரராக விரும்பும் மேஷ ராசிக்காரர்கள் மாற்றுத் திறனாளிகளுக்கு தேவையான பொருட்களை தானம் செய்தால் பலன் கிடைக்கும்.

**ரிஷபம்:** ரிஷப ராசிக்காரர்கள் செவ்வாய்க் கிழமைகளில் சாம்பார் சாதம் தானம் செய்ய வேண்டும். இதனால் செல்வம் பெருகும். மேலும் ஏழை பெண்களின் திருமணத்துக்கு உங்களால் முடிந்த பொருட்களை தானம் செய்யுங்கள். இதனால் தடையில்லாத முன்னேற்றம் ஏற்படும்.

**மிதுனம்:** மிதுன ராசிக்காரர்கள் தவறாமல் பித்ரு வழிபாடு செய்ய வேண் டும். புதன்கிழமைகளில் பெருமாளை தரிசனம் செய்து வெண் பொங்கலை உங்களால் முடிந்த அளவுக்கு தானம் கொடுங்கள். எல்லா வித செல்வமும் தேடி வரும். மேலும் ஏழை மாணவர்களுக்கு படிப்புக்கு பண தானம் கொடுப்பதும் நல்லது.

**கடகம்:** கடக ராசிக்காரர்கள் பசுமாட்டுக்கு உணவு தானம் செய்வதை வழக்கமாக கொள்ள வேண்டும். இது குடும்பத்தில் வறுமையை விரட்டி செல்வத்தை சேர்க்க உதவும். மேலும் ஏழை நோயாளிகளுக்கு மருந்து வாங்கி தானம் கொடுத்தால் உங்களுக்கு நிம்மதியான வாழ்வு கிடைக்கும்.

**சிம்மம்:** சிம்ம ராசிக்காரர்கள் ஏழை எளியோர்களுக்கு அடிக்கடி தயிர் சாதம் தானம் செய்ய வேண்டும். இதனால் உங்கள் மனதில் அமைதி ஏற்படும். மேலும் மாற்றுத்திறனாளிகளுக்கு தேவையானதை கேட்டு வாங்கிக்கொடுங்கள். அது புண்ணியத்தை சேர்க்கும்.

**கன்னி:** கன்னி ராசிக்காரர்கள் குரு பகவானை தவறாமல் வழிபடவேண்டும். கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு கோதுமையால் ஆன இனிப்பு மற்றும் உணவு பொருட்களை தானம் செய்ய வேண்டும். மேலும் ஏழை மாணவர்களுக்கு நோட்டு, பென்சில், பேனா வாங்கிக் கொடுக்காலாம்.

**துலாம்:** துலாம் ராசிக்காரர்களுக்கு விநாயக வழிபாடு கைகொடுக்கும். அடிக்கடி ஏழை எளியோர்களுக்கு வெண் பொங்கல்தானம் செய்யுங்கள். இதனால் புதிய சொத்துக்கள் வந்து உங்களுக்கு சேரும். மேலும் ஆதரவற்ற இல்லங்களில் தங்கி படிக்கும் மாணவ மாணவிகளுக்கு படிப்பு உதவித்தொகை தானமாக கொடுத்தால் உங்கள் வாரிசுகளுக்கு நல்லது.

**விருச்சகம்:** விருச்சக ராசிக்காரர்கள் தங்களால் இயன்ற அளவு மாற்றுத்திறனாளிகளுக்கு தானம் செய்ய வேண்டும். கடன்கள் தீர லட்சுமி நரசிம்மரை வழிபட்டு பானகம் தானம் செய்யலாம். மேலும் அம்மன் கோவிலுக்கு வரும் பக்தர்களுக்கு சர்க்கரை பொங்கல் தானம் செய்தால் பண வரவு அதிகரிக்கும்.

**தனுசு:** தனுசு ராசிக்காரர்கள் தவறாமல் முருகனை வழிபட வேண்டும். குருபகவானுக்கு கொண்டை கடலை மாலை அணிவித்து பிறகு பக்தர்களுக்கும் தானம் செய்யலாம். வாரம் ஒரு முறை செவ்வாய் அல்லது வெள்ளியில் துர்க்கை அம்மனுக்கு மலர் தானம் செய்யலாம். மேலும் செவ்வாய்க் கிழமைகளில் சாம்பார் சாதம் தானம்செய்தால் வாழ்வு செழிக்கும். மேலும் வயதான பெண்களுக்கு தானம் செய்தால் நல்லது.

**மகரம்:** மகர ராசிக்காரர்கள் ஏழை பெண்களின் திருமணத்துக்கு உங்களால் முடிந்ததை தானமாக கொடுக்க வேண்டும். மேலும் வாயில்லா ஜீவன்களுக்கு தீவனம் வாங்கி கொடுக்கலாம். கோவில்களில் சீரமைப்பு பணிகள் நடக்கும்போது தானம் செய்தால் வீட்டில் லட்சுமி கடாட்சம் உண்டாகும்.

**கும்பம்:** கும்ப ராசிக்காரர்கள் குலதெய்வ வழிபாடை மறக்காமல் செய்ய வேண்டும். ஏழைகளுக்கு கதம்ப உணவை அடிக்கடி தானமாக கொடுக்க வேண்டும். இதனால் உங்களுக்கு வரும் பண வரவு இரட்டிப்பாகும். மேலும் ஏழை நோயாளிகளுக் மருந்து மாத்திரி வாங்கி கொடுத்தால் வளமான வாழ்வு அமையும்.

**மீனம்:** மீன ராசிக்காரர்கள் பவுர்ணமி நாட்களில் சிவ தரிசனம் செய்வது நல்லது. ஏழை மாற்றுத்திறனாளிகளுக்கு உதவினால் புண்ணியம் அதிகரிக்கும். மேலும் நல்லெண்ணை தீபம் தானம் செய்யலாம். அய்யப்ப பக்தர்களுக்கு உதவினால் கூடுதல் நன்மை உண்டாகும்.

தானம் கொடுக்கும்போது எந்த வித விளம்பரமும் இன்றி கொடுக்க வேண்டும். பத்துரூபாய் செலவில் ஒரு பொருளை கொடுக்க ஆயிரம் ரூபாய் விளம்பரம் செய்து கொடுக்கும் தானத்தால் எந்த பலனும் கிடைக்காது.

# கர்வத்தை போக்கும் கிருஷ்ணார்ப்பணம்

கண்ணன் ஒய்யாரமாகப் படுத்துக் கொண்டிருந்தான். உறங்க வில்லை. ஆனால், உறங்குவதுபோல் தோற்றம் காட்டிக் கொண்டிருந்தான். அவன் உறங்குவதாக நினைத்து ஒருபக்கம் கருடனும், கண்ணன் கைச் சக்கரமும் ஏதோ பேசிக் கொண்டிருந்தன.

கண்ணன் ஒரு முறுவலுடன் அவற்றின் பேச்சைச் செவிமடுத்தான்.

கருடன் தன் மெல்லிய இறகுகளைக் கூர்மையான அலகால் கோதிக்கொண்டே பெருமை பொங்கச் சொல்லிற்று:

“சக்கரமே! திருமால் தான் இப்போது கண்ணனாய் இங்கே வந்திருக்கிறார் தெரியுமல்லவா? அதனால் தான் அவருக்கு எப்போது நான் தேவைப்படுவேனோ என்று இங்கே காத்துக் கொண்டிருக்கிறேன். கஜேந்திர மோட்சத்தின்போது என் உதவி இல்லாவிட்டால் அவரால் முதலையை வதம் செய்திருக்க முடியுமா என்ன? வாயு வேகம் மனோ வேகம் என்பார்களே, அப்படியல்லவா திருமால் நினைத்த மறுகணம் அவரைச் சுமந்துகொண்டு சம்பவம் நடந்த இடத்திற்குப் பறந்துசென்றேன்!’’

இதைக் கேட்ட சக்கரம் ஒரு சுற்றுச் சுற்றிக்கொண்டே கடகடவென்று சிரித்தது. “”நீ என்ன வேகமாக அவரைத் தூக்கிக் கொண்டு பறந்தாலும் நான் மட்டும் இல்லாவிட்டால் அவர் எப்படி முதலையை வதம் செய்திருக்க முடியும்? என்னை வீசித்தானே அவர் முதலையைக் கொன்றார்? நீ திருமாலுக்குச் செய்த உதவியின் பெருமையை விட நான் செய்த உதவியின் பெருமை தான் அதிகம்!’’

கண்ணன் உள்ளூர நகைத்துக் கொண்டான். “இவ்விரண்டிற்கும் சக்தியைக் கொடுத்ததே நான் தான். அப்படியிருக்க இவைகளுக்குத் தான் எத்தனை ஆணவம்? எனக்கு இவை உதவி செய்த்தாமே?’

அதற்குள் சலசலவெனப் பெண்களின் பேச்சுக் குரல் கேட்கவே, கண்ணனின் கவனம் குரல் வந்த பக்கம் திரும்பியது. பேசிக் கொண்டிருந்தவர்கள் அவனது ராணிகள் தான்.

“நம் அழகால் கவரப்பட்டுத்தான் கண்ணன் நம்மைத் திருமணம் செய்துகொண்டான். நமக்கு இணையான அழகிகள் உலகில் எங்குமில்லை!’’ என்றாள் ஒருத்தி.

“அதென்னவோ உண்மைதான். ஆனாலும், உன்னைவிட நான் சற்றுக் கூடுதல் அழகு என்பதும் கூட உண்மைதானே?’’ என்றாள் இன்னொருத்தி!

தங்களின் அழகைப் பற்றிய ராணிகளின் கர்வம் நிறைந்த பேச்சைக் கேட்டுக் கண்ணனுக்கு நகைப்பு வந்தது.

“உடல் அழகாக இருந்து என்ன பயன்? உள்ளமல்லவா அழகாக இருக்கவேண்டும்? என் ராதைக்கு வாய்த்த உள்ளம்போல் வேறு யாருக்கு வாய்க்கும்?’

“இவர்கள் இப்படிக் கர்வப்படுகிறார்களே? ராமாவதாரத்தின் போது என் பக்தனாக மாறிய ஆஞ்சநேயன் எத்தனை ஆற்றல் மிக்கவன். ஆனால் எத்தனை அடக்கம் நிறைந்தவன்! அவன் சிரஞ்சீவி. இன்னும் வாழ்ந்து வருகிறான் அல்லவா? சரி... ஒரே கல்லில் மூன்று மாங்காய் அடிக்க வேண்டியதுதான்! கருடன், சக்கரம், ராணிகள் அனைவரின் கர்வத்தையும் அடக்க ஒரு வழிசெய்வோம்‘’.

கண்ணன் எழுந்தான்.





“கருடா!’’ என அன்போடு அழைத்தான். கருடன் பறந்தோடி வந்து பவ்வியமாய் நின்றது.

“கந்தமாதன பர்வதம் என்ற பெயருடைய மலையில், குபேரனது ஏரியில், சவுகந்திக கமலம் என்ற அபூர்வமான தாமரை மலர்கள் பூக்கும் காலம் இது. மிக வசீகரமான வாசனை உடையவை அவை. நீ போய் என் ராணிகளுக்காகச் சில தாமரை மலர்களைப் பறித்து வருகிறாயா? நீதான் பலசாலி ஆயிற்றே? எந்த எதிர்ப்பு வந்தாலும் சமாளிப்பாயே. உன்னால் தானே மிக வேகமாகப் பறக்கமுடியும்?’

கண்ணனே தன்னைப் புகழ்வதைக் கேட்டு கருடனுக்குப் பெருமை தாங்கவில்லை.

“இதோ மின்னல் வேகத்தில் மலர்களோடு வருகிறேன்!’’ சொல்லிவிட்டு விண்ணில் பறந்தது அது.



ஆனால், அந்த இடத்தில்தான் அடக்கமே வடிவான ஆஞ்சநேயர் ராமநாம ஜபம் செய்துகொண்டு வசித்து வருகிறார் என்பதைக் கருடன் அறியவில்லை. கருடன் பாய்ந்து பாய்ந்து அலகால் மலர்களைக் கொத்திப் பறிப்பதைப் பார்த்த ஆஞ்சநேயர் திடுக்கிட்டார்.

“யாரப்பா நீ? இந்த மலர்கள் குபேரனுக்குச் சொந்தமானவை. அவரிடம் மலர்களைப் பறிக்க அனுமதி பெற்றாயா?’’

“ஏ கிழட்டுக் குரங்கே! நான் யார் தெரியுமா? துவாரகை மன்னனான கண்ணனின் கருடன். கண்ணபிரானுக்காகத் தான் இந்த மலர்களைக் கொய்துகொண்டிருக்கிறேன்.

கண்ணனுக்கான சேவைக்கு யார் அனுமதியும் தேவையில்லை!

கருடனின் கர்வம் நிறைந்த பேச்சைக் கேட்டு, ஆஞ்சநேயருக்குக் கடும் கோபம் வந்தது. சடாரெனப் பாய்ந்து, கருடனைப் பிடித்துத் தன் ஒரு கையிடுக்கில் இடுக்கிக் கொண்ட அவர், கருடனோடு ஒரே தாவாகத் தாவி துவாரகை சென்றார்.

ஆஞ்சநேயர் செய்த கர்ஜனையால் துவாரகை அதிர்ந்தது.

“கர்வம் பிடித்த இந்த கருடனை சேவகனாகக் கொண்டவர் யார்?’’ என்று அவர் முழங்கிய முழக்கத்தைக் கேட்ட கண்ணன், கஜேந்திர மோட்சத்தின் போது எனக்குக் கைகொடுத்த சக்கரமே! வந்திருக்கும் குரங்குடன் போரிட்டு அந்த கருடனைக் காப்பாற்றக் கூடாதா?’’ என்று வினவினார்.

“இதோ! உடனே அந்தக் குரங்கை என்ன செய்கிறேன் பாருங்கள்! என்றவாறு சக்கரம் சீறிப் பாய்ந்தது. மறுகணம் தாவிச் சென்று அந்தச் சக்கரத்தைப் பிடித்துத் தன் இன்னொரு கையிடுக்கில் இடுக்கிக் கொண்ட ஆஞ்சநேயர், “இந்த ஆணவம் பிடித்த சேவகர்களின் எஜமான் யார்?’’ என்று உறுமினார்.

அடுத்து, அந்தக் குரங்கு அரண்மனைக்குள் வந்தால் என்ன நேருமோ என ராணிகள் பயந்து நடுங்கி கண்ணனைத் தஞ்சம் புகுந்தார்கள். எப்படியாவது இந்தக் குரங்கை சமாளிக்க வேண்டும் என வேண்டினார்கள். கண்ணன் நகைத்தவாறே சொன்னான்.

“என் அன்பிற்குரியவர்களே! வந்திருக்கும் குரங்கு வேறு யாருமல்ல. ராம பக்தனான ஆஞ்சநேயர் தான். அவரது வலிமைக்கு முன் யார் வலிமையும் செல்லாது. ஆனால், ராமரும் சீதாதேவியும் நேரில் வந்து ஏதும் சொன்னால் அதற்கு அவர் கட்டுப்படுவார். எனவே நான் ராமராக உரு மாறுகிறேன். உங்களில் யார் சிறந்த அழகியோ அவர்கள் சீதையாக உரு மாறுங்கள். சீதை உருவத்தால் மட்டுமல்ல, உள்ளத்தாலும் அழகிய பெண்மணி. உங்களில் மன அழகு யாருக்கு வாய்த்திருக்கிறதோ அவர்கள் பிரார்த் தியுங்கள். சீதையின் வடிவம் உங்களுக்குக் கிட்டும்’.





எல்லா ராணிகளும் கண் ணை மூடிப் பிரார்த்தித்துப் பார்த்தார்கள். ஆனால் யாரும் சீதாதேவியாக உருமாற இயலவில்லை. கண்ணன் ராதையை அழைத்துவர உத்தரவிட் டான். ராதை வந்ததும் பிரச்னையைச் சொன் னான். ராதை கண் மூடிக் கைகூப்பி அமர்ந்துகொண்டாள்.

“எல்லாவற்றையும் நிகழ்த்துவது என் கண்ணன் தான். எனக்கென்று தனித்த பெருமை ஏதுமில்லை. அனைத்தையும் புரிவது கண்ணனே என்பது உண்மையானால், அவனது அருள் என்னை சீதாதேவியாக மாற்றட்டும்!’’ என்று உரக்கச் சொல்லிப் பிரார்த்தித்தாள்.

அந்த விந்தையான பிரார்த்தனையைக் கேட்ட ராணிகள் திகைத்து தங்களின் ஆணவம் அகன்று நின்றார்கள். ஒரு கணத்தில் ராதை சீதையானாள்.

“இந்த ஆணவம் பிடித்த சேவகர்களின் அரசன் யார்?’’ என்றவாறே அரண்மனையின் உள்ளே வந்த அனுமன் ராம பிரானையும் சீதாதேவியையும் கண்டு திகைத்தான்.

“பிரபோ! தாங்களா துவாரகையை ஆட்சி செய்கிறீர்கள்?’’ என்று பக்திப் பரவசத்துடன் வணங்கினான்.

“அன்றைய ராமன்தான் இன்றைய கண்ணன்!’’ என்று சிரித்துக் கொண்டே சொன்ன கண்ணபிரான், உன் கையிடுக்கில் உள்ள என் சேவகர்களை விட்டுவிடு. அவர்கள் ஆணவம் இன்றோடு ஒழிந்தது!’’ என்றான்.

“அப்படியே ஆகட்டும் பிரபோ!’’ என்ற அனுமன் தன் பிடியில் இருந்த கருடனையும் சக்கரத்தையும் விடுவித்தார்.

கடவுள் பணி செய்பவர்களுக்கு அகந்தை ஆகாது! என அறிவுறுத்திவிட்டு, “ஜெய்ஸ்ரீராம்‘ என்றவாறே விண்ணில் தாவி மறைந்தார். ராமனாக மாறிய கண்ணனும். சீதையாக மாறிய ராதையும் பழைய உருவத்தை அடைந்தனர்.

“நாங்கள் அடங்கிவிட்டோம்!’’ என்று கருடனும் சக்கரமும் கண்ணனைப் பணிந்த போது, “நாங்களும் அடக்கத்தைக் கற்றுக் கொண்டுவிட்டோம்!’’ எனக் கண்ணனின் ராணிகளும் ராதையைப் பணிந்து வணங்கினார்கள்.

“நீங்கள் அனைவரும் என் காலில் விழுந்து வணங்கும் இந்தப் பெருமையும் கூடக் கிருஷ்ணார்ப்பணம்!’’ என்று ராதை கண்ணனை நோக்கிக் கைகூப்பியபோது அவனது மனம் நிறைவடைந்தது.

# பழனி பாத யாத்திரை செல்பவர்களுக்கு பழனி அன்னதானக் குடிலின் சேவை

பழநி தைப்பூச பாதயாத்திரை பக்தர்களுக்கு அன்னதானம் வழங்கும் விழாவுக்கு உங்களை வரவேற்கிறேன். அண்ணாமலையார் ஆன்மிக வழிபாட்டு குழுவின் சார்பில், ஏழாம் ஆண்டாக, நாம், பழநி முருகன் அன்னதான குடிலில் கூட இருக்கிறோம்.

இதில் பங்கேற்க விரும்புபவர்கள், பழநிக்கு வந்து போவதற்கான போக்குவரத்து ஏற்பாட்டை மட்டும் செய்து கொள்ள வேண்டியது.

வரும் 6ம் தேதி காலை 7 மணிக்குள்ளாக பழநிக்கு வந்து சேர்ந்தால் போதுமானது.

தேவஸ்தான விடுதியில் அறைகள் போடப்பட்டுள்ளது இங்கு குளித்துவிட்டு, காலை டிபனை முடித்துவிட்டு, மலைக்கு சென்று தரிசனம் முடித்து தேவஸ்தான விடுதிக்கு வந்து ஓய்வு எடுக்க கேட்டு கொள்ளப்படுகிறது.

6ம் தேதி மதியம் 3:00 மணிக்கு, வேன் மூலம் ஒட்டன் சத்திரம் கல்யாண மண்டபத்திற்கு அழைத்து செல்ல ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.

6ம் தேதி மதியம் 4:30 மணிக்கு அன்னதான விழா துவங்குகிறது. சிறப்பு பூஜை, இன்னிசை நிகழ்ச்சியை தொடர்ந்து இரவு 7 மணிக்கு பக்தர்களுக்கு அன்னதானம் துவங்கும்.

7ம் தேதி காலை மற்றும் மதியம் அன்ன தானம் நடைபெற உள்ளது. அன்று மாலை 5 மணிக்குள்ளாக விழா இனிதே நிறைவு பெறும்.

சென்னையில் இருந்து வருபவர்கள், சென்ட்ரல் பழநி ரயிலில் வரலாம். இந்த ரயிலில் 7ம் தேதி திரும்பி செல்வதற்கு புக் செய்யும் போது, .boarding ஒட்டன்சத்திரம் என்று போடவும். பழநியில் இரவு 6:15 மணிக்கு புறப்படுகிறது. ஒட்டன்சத்திரத்திற்கு 6:45 மணிக்கு வருகிறது.

இந்த அன்னதானம் முழுக்க பழநி முருகனால் நடத்தப்படுகிறது. இதில் பங்கேற்க விரும்பு



பவர்கள் வந்து செல்வதற்கான ஏற்பாட்டை மட்டும் பார்த்து கொள்ள வேண்டும்.

அன்னதானத்தில் சேவையாற்ற வரும் உங்க ளுக்கு தேவையான ஏற்பாடுகளை செய்து தருவது அனனதான குடிலின் பொறுப்பு.

கல்யாண மண்டபத்தில் இரவு தங்குவதால், போர்வை எடுத்துவருவது நலம். நீங்கள் வரு வதை பற்றி வரும் 27ம் தேதிக்குள் சொன்னால் பழநியில் கூடுதலாக ரூம், வேன் ஏற்பாடு, தரிசன ஏற்பாடு செய்ய வசதியாக இருக்கும்.

அன்னதானத்திற்கு நன்கொடை அளிக்க விரும்புபவர்கள் நேரில் வழங்கலாம். இப்பணியில் தொண்டராக சேவையாற்ற விரும்புபவர்கள், கீழ்கண்ட தொலைபேசி எண்களில் தொடர்பு கொள்ளலாம். : 9944309719. 9842198889

மணிவாசகம்
அன்னதான குடில் பொறுப்பாளர்
மணிவண்ணன்
குழு ஒருங்கிணைப்பாளர்







## வாருங்கள் எங்களுடன் பயணிக்க...

**உலக அளவில் இமெயில் மூலம் இலவச இதழாக வெளிவரும் நமது இதழில் ஆன்மிக நாட்டமும் விருப்பமும் உள்ள அன்பர்கள் வரவேற்கப்படுகிறார்கள்.**

**உங்களுக்கு தெரிந்த திருக்கோயில்கள், மகான்கள், சித்தர்கள், இந்துமத சடங்கு-சம்பிரதாயம் போன்றவற்றை**

(உங்களது பெயர், முகவரி, தொ.பே.எண்ணுடன்)

**எங்களுக்கு தெரியப்படுத்துங்கள். நமது வாசகர்கள் பயன்படுத்த பிரசுரிப்போம். தெரியாதவர் தெரிந்து கொள்ள எங்கள் பயணத்தில் நீங்களும் இணைந்து பயணியுங்கள்**

தொடர்பு கொள்ளவும்:
**ஆசிரியர்: நாகராஜன்**
16, பாரதீஷ்வரர் காலனி, 4வது தெரு, கோடம்பாக்கம்
பொன்மணிமாளிகை அருகில்,
சென்னை 600024, தமிழ்நாடு, இந்தியா
தொலைபேசி 7299992699/ 8939499598

# குருவின் மகிமைகள்

மாமா, பிதா, குரு, தெய்வம் என்னும் கோட்பாடு அனைத்து மதங்களிலும் உண்டு. குரு உபதேசம் பெற்றால்தான் தெய்வத்தை தெரிய முடியும்.

குரு சுட்டிக் காட்டினால்தான் ஆத்ம ஜோதியை உணர முடியும். “குரு இல்லாக் கல்வி கரு இல்லா வித்தையைப் போல்” என்பதும் “தொட்டுக் காட்டாத வித்தை சுட்டுப் போட்டாலும் வராது” என்பது முதுமொழிகள்.

தொட்ட உடன் ஜோதி தட்டவும் சிவராஜ யோகம் கிட்டவும் என குணங்குடி மஸ்தான் பாடியுள்ளார். குரு நினைத்தால் ஒரு சிஷ்யனுடைய ஞானக்கண்ணை உடனே திறக்கலாம்.

சில குருமார்கள் சிஷ்யனுடைய புருவ மத்தியத்தை அவர்களது வலது கட்டை விரலால் அழுக்குவார்கள். அடுத்த நொடியே சிஷ்யன் தலையில் பெட்ரோமாக்ஸ் ஒளிமாதிரி ஒரு ஒளிப்பிரவாகம் தலைக்குள் ஏற்படும். பின் குருசிஷ்யன் தலையில் கை வைத்து அதை மறைத்து விடுவார்.

சிஷ்யனும் தான் யதார்த்த நிலைக்கு திரும்புவான். இந்த ஒளி நிலையைப் பெற நிரந்தரமாக பெற நீ தவம் செய்ய வேண்டும் என அறிவுரை கூறி தீட்டைச கொடுப்பார்.

மந்திரம்-யந்திரம் மூலிகைகள் தந்திரம் ஆகியவை மூலம் தீட்சை கொடுப்பது சக்தி மார்க்கமாகும். இதற்கு அஷ்டகர்மம் எனப்படும். மோகனம் – வசியம் – தம்பனம் – ஆகர்ஷனம் – உச்சாடனம் – பதனம் வித்வேடனம் – மாரணம் என்னும் எட்டு வித்தைகளும் இதில் அடங்கும்.

ராஜயோகம், சிவராஜயோகம், ஹடயோகம் மற்றும் குண்டலியோகம் என்பன சிவ மார்க்க மாகும். இவை அஷ்டாங்க யோகம் என்னும் அட்டவணையில் அடங்கும். இவற்றில் மூச்சுப் பயிற்சியும், ஆசனங்களும் முக்கியம்.

ஒரு மனிதன் ஆன்மிக நிலை அடைய வேண்டுமானால் ஒரு குருவிடம் சக்தி மார்க்கத்தில் தீட்சை பெற வேண்டும் அல்லது சிவ மார்க்கத்தில் தீட்சை பெற வேண்டும்.

எந்த குருவிடம் போனாலும் நம் கர்மாவை அவர்கள் மாற்ற மாட்டார்கள். அப்படி மாற்றி னால் நம் கர்மாவை அவர்கள் அனுபவிக்க வேண்டியது வரும். நம் கர்மாவினால் அவர்கள் தபோபலம் குறையும். அதனால் அவர்கள் நமக்கு வழிகாட்டுவார்கள். ஆசிர்வதிப்பார்கள். அவ்வளவுதான் அவர்கள் வழிகாட்டிய இலக்கை நோக்கி நாம்தான் பிரயாணப் பட வேண்டும். இதுதான் உண்மை.

தர்மம் செய்தால் மட்டுமமே கர்மம் நீங்கும். வெறும் புத்தகப் படிப்பு மந்தக படிப்பும் பலன் தராது. வழிகாட்டக் கூடிய குருவுக்கு பெயர் காரண குரு. நீங்கள் ஒரு நிலையை அடைந்தபின் உங்கள் உள்ளொலியில் வருபவர் காரணகுரு. அக்காரிய குருதான் உங்கள் தவத்தைப் பொறுத்து ஒரு கட்டம் வரைதான் இந்த பூமியில் ஆகர்ஷண சக்திக்கு உட்படுவீர்கள். அதன் பின் பூமியின் ஆகர்ஷண சக்தியிலிருந்து விடுபடுவீர்கள், குருமார்கள் பலவிதம்.

அவர்கள் அனுபவம் மூலம் பலருக்கு வழிகாட்டுவார். பலவித தீட்சைகள் மூலம் சிஷ்யர் களை பக்குவப்படுத்துபவர்.

1. ஒரு மந்திரத்தை சிஷ்யனது வலது காதில் உபதேசித்தல் மந்திர தீட்சை எனப்படும். சிஷ்யன் மந்திரத்தை நம்பிக்கையுடன் உபதேசித்தால் அவன் சித்தி அடைவான்.

2. ஒரு சிஷ்யனை ஒரு ஸ்லோகம் அல்லது ஒரு பாட்டை மனமுருகி திரும்ப திரும்ப படிக்க சொல்வது அல்லது பாடச் சொல்வது வாசக தீட்சை எனப்படும்.

3. ஒரு சிஷ்யனது உடலை தொட்டு அவன் உள் முடங்கிக் கிடக்கும் சக்தியை தட்டி எழுப்பி விடுவது ஸவர்ச தீட்சை.

4. தான் சுவைத்த பழத்தையோ அல்லது தான் குடித்த பாலையோ சிஷ்யனுக்கு கொடுப்பது அமிர்த தீட்சை.

5. ஆசனங்கள் மூச்சுப் பயிற்சி மூலம் சிஷ்ய னது மூலாதார சக்தியை கிளப்பிவிடுவது யோக தீட்சை.

6. தன்னுடைய காந்தப் பார்வையை சிஷ்யனு டைய கண்களில் செலுத்தி அவன் உடலில் உள்ள காந்த சக்தியை அதிகரிக்க வைப்பது நயன தீட்சை.

7. மௌன நிலையில் சின் முத்திரை காட்டி குரு தட்சிணாமூர்த்தி ஜனகாதி முனவர் நால்வருக்கு உபதேசிப்பது மௌன தீட்சை.

நான் கேள்விப்பட்ட தீட்சைகளை எழுதியுள்ளேன். மொத்தம் 64 தீட்சைகள் உண்டு என பெரியவர்கள் சொல்கின்றனர்.

கேரளாவில் குருவை கடைசிவரை மதித்து மரியாதை செய்து வருகின்றனர். தமிழ்நாட்டில் அப்படி இல்லை. வருடத்திற்கு ஒரு முறையாவது குருவை தரிசனம் செய்து அவர்களுக்கு தங்களால் ஆன உதவிகளை செய்வது மிகுந்த பலனைத் தரும்.

இப்பொழுது நடப்பது கலியுகம். இந்த கலியுகத்தில் ஒரு சில நல்லது நடந்தாலும் பல தீங்கான விஷயங்களாகவே அமையும். ஆன்மிகம் என்னும் புனிதத்தில் காசு பணத்திற்காக பல்வேறு போலியான குருமார்களும் தோன்றியுள்ளது கலியுகத்தின் காலக் கட்டாயமாகும். இதனால் இந்து மதத்திற்கும், இந்திய நாட்டிற்கும் பெரும்பாலும் அவப்பெயரே ஏற்படும்.

இதுபோன்ற காலக் கொடுமையான நேரத்திலும் உண்மையான குருமார்களை தேடிக் கண்டுபிடித்து அவரை சரணாகதி அடையும் பேறு பெற்ற சிஷ்யர்கள் உண்மையில் மிகப் பெரிய பாக்கியவான்களாகவே இருப்பார்கள்.

ஸ்ரீ அம்பாள் உபாசகர்
A.R.R.சுதர்ஸன ஐயங்கார்
அனைத்துவித ஜோதிட ஆலோசனைகளுக்கு
செல்: 9840369513






ஆசிரியர், வெளியீட்டாளர்
C.நாகராஜன்
•••
இணை ஆசிரியர்
முருகன்
•••
துணை ஆசிரியர்கள்
ஷியாம்சுந்தர், சஞ்சனா, ஸ்ரீபதி,
•••
•••
வடிவமைப்பு
பான்ராஜாகிராபிக்ஸ்
•••
நிர்வாக அலுவலகம்
aanmeegamalar.com
நெ.16/18, பாரதீஸ்வரர் காலனி, 4வது தெரு,
கோடம்பாக்கம், சென்னை 600024.
7299992699/8939499598



ஆசிரியர் குழுவில் நீங்களும் இணையலாம்

நமது ஆன்மிகமலர்.காம் இதழின் ஆசிரியர் குழுவில் இணைந்து செயல்பட உங்களுக்கு வாய்ப்பு தரப்படுகிறது. ஆன்மிகம் சம்பந்தப்பட்ட விஷயங்களை எழுத ஆர்வமுள்ள அன்பர்கள் எங்களை தொடர்பு கொள்ளுங்கள், விளம்பரம் பெற விரும்புவர்களும் எங்களை தொடர்பு கொள்ளவும். உங்களை எங்களுடன் ஒருவராக இணைத்துக் கொள்கிறோம்.

தொடர்பு கொள்ளவும்
8939499598
7299992699 / 9677159070


# குளத்து நீரில் கால் கழுவதால் ஏற்படும் அற்புத பயன்கள்

கோவில்களுக்கு செல்லும்போது மறக்காமல் சோம்பல் இல்லாமல் அந்த கோவிலின் குளத்தில் கால் கழுவி செல்லுங்கள் ஏனென்றால் பிரபஞ்சத்தில் இருக்கிற கிரகங்களின் கதிர்களை உள்வாங்கி தக்க வைத்து கொள்கிற தன்மை தண்ணீருக்கு உண்டு அதே போல் கடத்துகிற தன்மையும் தண்ணீருக்கு உண்டு. அந்த கோவிலில் எச் சக்தி தீர்மானித்து இருகிறார்களோ அச் சக்தியை குளத்தில் உள்ள நீர் கிரகித்து தக்க வைத்து இருக்கும்.

மேலும் மூளைக்கு செல்லும் நரம்புகளின் நுனிகள் கால் பாதங்களின் முன் பகுதி, பின் பகுதி, பின் காலில் இருக்கிற மெல்லிய எலும்புகள் நம்முடைய முதுகு எலும்போடு தொடர்பு உடையதால் சில் என்ற இந்த சக்தி நிறைந்த நீர் நரம்புகளை தூண்டி எலும்புகளை வலுபெற செய்து நீங்கள் கோவிலுள் பெற போகும் சக்திக்கு நம்மை ஆய்தத படுத்தும். அப்புறம் நுழை வாயிலில் இருக்கிற படிகளில் கால்பாதம் அழுந்த மிதித்து ஏற வேண்டும். இது இக்காலத்திற்கு சொன்னால் சிறந்த அக்குபஞ் சர் அழுத்தம். நம்முடைய கால்ப்லாடார், பெரிகாடியம்,மூலையில் உள்ள பதிவு இடங்களை சமன் படுத்தும்.

கோவிலின் பிரகாரத்தை சுற்றி நடக்க நம்முடைய ரத்த அழுத்தம் சீராகும். ரத்த ஓட்டம் சீராகும்போது மூளையின் பரபரப்பு தன்மையும் அடங்கி மூலையில் சுரக்கும் சுரபிகளின் செய்யலபாடும் சமன் படும். இதனால் உடலில் பரபரப்பு தன்மை அடங்கி அமைதி ஏற்படும் . கோவிலின் உள்ளே செல்லும்போது உடம்பும் மனதும் ஒருமித்து இருக்கும். அபபொழுது அக் கோவிலில் தீர்மானம் செய்ய பட்டு போற்றி வருகிற சக்தி நம்முள் இறங்கும். நான் ஏற்கனவே கட்டுரை களில் கூறி உள்ளபடி நம்முடைய எண்ணங்களும் செய்யல பாடுகளும் பிரபஞ்சத்தில் இருக்கிற கிரகங்களின் உடைய சக்தியின் ப்ரோக்ராம்மை யை சிறிது மாற்றும்.நமக்கு எந்த கிரகத்தின் பாதிப்பு உள்ளதோ அதை சீர் செய்யும். கோவில் இருக்கிற சக்தி என்பது பிரபஞ்சத்தில் இருந்து பூமியில் விழுகிற கிரகங்களின் கதிர் வீச்சு அதை உள்வாங்கி தான் ஒரு ஸ்தூபி போல கற்பகிரகத்தில் நிறுத்தி இருப்பார்கள்.

கற்ப கிரகத்தில் இருக்கிற சக்தியை தூண்டுகிற விதமாகத்தான் கோவில்களில் பொருள்கள் பயன்படுத்தப்படும் பூ,சந்தனம், விபூதி, குங்குமம் போன்றவை. கர்பகிரகத்தின் உள்ளே ஏற்றப்படும் தீபம் கூட அச் சக்திக்கு தேவை படுகிற அளவு வெப்பத்திற்கு தகுந்தாற்போல் 1,3,5,7,9, த்ரி தீபங்கள் ஏற்றப்படும்.

அங்கு வழங்க படுகிற பிரசாதம் கூட அச் சக்தியை நம் உடலுக்கு கொண்டு செல்லுகிற விஷயமாகத்தான் வைத்து இருப்பார்கள். மேலும் எந்த கோவிலிக்கு சென்றாலும் உட் பிரகரததிலோ அல்லது கோவில் வாளகததி னுல்லோ குறைந்தது ஒரு மணி நேரம் இருக்க வேண்டும். இதற்காகத்தான் விளக்கு பூஜை, சங்கு பூஜை, அபிஷேகம்,சொர்ண அபிஷேகம், ஆராதனை , என்று மக்களை கோவிலுள் இருக்க வைத்து, அச் சக்தியை பெற வைத்தார்கள் நம் முன்னோர்கள்.





விளம்பர விபரம்
அரை பக்க விளம்பரம்
ரூ.2500
முழு பக்க விளம்பரம்
ரூ.5000
பேக்கேஜ் விளம்பரங்களும் ஏற்றுக் கொள்ளப்படும்
விளம்பர ஏஜென்சிகளும் வரவேற்கப்படுகிறார்கள்

கோவில்களில் நடைபெறும், நடைபெற்ற, நிகழ்ச்சிகளை இலவசமாக பிரசுரிக்கிறோம். நிகழ்ச்சி பற்றி முழு தகவலையும் கோவிலின் புகைப்படத்தையும் அனுப்பிவைக்கவும்

விளம்பர தொடர்புக்கு:
8939499598 / 9677159070
aanmeegamalar@gmail.com

உங்களைத்தான் தேடுகிறோம்...
ஆன்மீகமலர்.காம்
இணையதளத்தின் மூலம் வெளிவரும் ஆன்மீகமலர்.காம் மெயில் புத்தகத்தில் நீங்களும் துணை ஆசிரியராக வாய்ப்பளிக்கிறோம்...
உங்கள் ஊரில் உள்ள கோயில், மடம், சித்தர்கள், ஆன்மீக சேவை புரியும் அன்பர்கள், உழவாரப்பணி செய்யும் அன்பர்கள், கோயிலின் சிறப்புகள் போன்றவற்றை தொகுத்து வழங்க விருப்பமிருந்தால் எங்களைத் தொடர்பு கொள்ளவும்.
எங்களுடன் நீங்களும் இணைந்து ஆன்மீக சேவை புரியலாம்...
தொடர்பு கொள்ளவும்:
7299992699 / 8939499598
aanmeegamalar@gmail.com

# மனித வாழ்வ மேம்படுவதற்காக

பாகம் 3

## பரமஹம்ஸ யோகானந்தர் அருளிய வழிமுறைகள்

உறவுகள் பல உள்ளவற்றில் மிகவும் மேன்மையான உறவு ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் இடையேயான அன்பாகும். அதற்கு மேலான அன்பும் இல்லை; உறவும் இல்லை. ஏதாவது உறவு இருந்தாலும் அது ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் இடையே உள்ள அன்பிற்கு நிகராகாது. ஏனென்றால் இறைவன் மனிதனுக்கு உடலையும் தந்து அவனுக்குள்ளே பரமாத்மாவாகிய இறைவனும் வந்து உட்கார்ந்திருக்கும்போது அந்த இரு உறவுகளுக்கும், அல்லது அந்த இரு அன்பிற் கும் மேலான அன்பு அல்லது உறவு வேறு எங்கு இருக்கும்? இவ்வாறிருப்பதால் நமக்கு இறைவனால் அருளி வழங்கப்பட்ட இந்த மனித உடல் முழுவதுமே இறைவனுக்காகவே பயன்படவேண்டும் என்பது உறுதியாகிறது. அதற்காக நாம் இறைவனின் பணிகளைச் செய்வதிலும் அவனுடைய நினைவிலும் இருக்கவேண்டும் என்பதும் உறுதியாகிறது. மொத்தத்தில் இறைவனின் பிரதிபிம்பமாகிய நாம் இந்த உலகத்தில் இறைவனைச் சுமந்து கொண்டு வந்ததே அவனை அறிவதற்கும் அடைவதற்கும்தான் என்பதை மகான்கள் குறிப்பிட்டுக் கூறுகின்றனா். எனவே ஜீவாத்மாபரமாத்மா அன்பைப்பற்றி குருதேவா் ஸ்ரீ ஸ்ரீ பரமஹம்ஸ யோகானந்தா் கீழ்க்கண்டவாறு வலியுறுத்திக் கூறுகிறாா்.

### ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் இடையேயான பரிபூரண அன்பு:

“தியானத்தில் இறைவனுடன் தொடா்பு கொள்ளும்பொழுது, மிக மிக உயா்ந்த அன்பை அனுபவிக்க முடியும். ஜீவாத்மாவிற்கும் பரமாத்மாவிற்கும் இடையே உள்ள அன்பைத்தான் நீங்கள் தேடிக்கொண்டிருக்கிறீாகள்”.

“நிரந்தரமற்ற மனித அன்பைத்தேடி ஏன் உங்கள் முழு நேரத்தையும் வீணடிக்கிறீாகள்? தெய்வீக அன்பு மட்டும்தான் முழுமையான அன்பாகும். உங்களுக்கு என்றென்றும் சொந்தமான இறைவனை நேசியுங்கள். இறைவனின் தெய்வீக நிலையில் மூழ்கியிருக்கும் ஒருவரது உணா்வு நிலையில் ஏமாற்றுதலோ, குறுகிய ஜாதி மத பேதங்களோ எந்தவிதமான எல்லைக்கோடுகளோ இல்லை. அனைவரும் இறைவனின் குழந்தைகள்”.

இறைவனின் அன்பு கண்ணபிரானிடம் தெய்வீகமாக வெளிப்பட்டது பற்றி பரமஹம்ஸா் கீழ்கண்டவாறு கூறுகிறாா்:

“கண்ணபிரான் அவருடைய வாழ்க்கையில் தூய்மையான அன்பின் மிக உயா்ந்த தன்மையை வெளிப்படுத்தினாா். ஓா் ஆணிற்கும் ஒரு பெண்ணிற்கும் இடையில் எந்தவித களங்கமும் இல்லாத உண்மையான அன்பு ஏற்பட முடியும் என்பதை அவா் உலகிற்குக் காண்பித்தாா். கண்ணனுடைய வாழ்க்கையின் உண்மையான சிறப்பு அம்சத்தை அச்சிட வேண்டும் என்று நான் விரும்புகின்றேன். ஏன் எனில் அது மிகத் தவறாகப் புரிந்து கொள்ளப்பட்டும், மிகத் தவறாக விளக்கப்பட்டும் வந்துள்ளது. அவா் வெளிப்படுத்திய தெய்வீக அன்ப இந்த உலகத்தில் ஒப்பற்றதாகும்”.

### குருசிஷ்ய நிபந்தனையற்ற தெய்வீக நட்பு;

அவா் மேலும் கூறுகிறாா்:

“கிருஷ்ணனுக்கு பல பெண் சீடா்கள் இருந்தனா். ஆனால் ராதை மிகப் பிரியமானவள். ஒவ்வொரு சிஷ்யையும் “கிருஷ்ணன் யாரையும் விட என்னைத்தான் அதிகம் நேசிக்கிறான்” என்று தனக்குள் கூறிக் கொள்வாா்கள். கிருஷ்ணன் அடிக்கடி ராதையைப் பற்றிப் பேசி வந்ததினால் மற்றவா்கள் அவளிடம் பொறாமை கொண்டவா்களாயினா். அவா்களுடைய பொறாமையை கண்ட கிருஷ்ணன் அவா்களுக்கு ஒரு பாடம் புகட்ட விரும்பினாா். எனவே ஒரு நாள் அவா் தனக்கு மிகுந்த தலைவலி இருப்பதாகப் பாசாங்கு செய்தாா். விசாரமடைந்த சிஷ்யைகள் தம் குருதேவரின் துன்பத்திற்காக தமது ஆழ்ந்த கவலையை வெளிப்படுத்தினாா்கள். கடைசியில் கிருஷ்ணன், “உங்களில் ஒருவா் என் தலை மீது நின்று கொண்டு உங்கள் கால்களால் என் தலையை தேய்த்துவிட்டால் என் தலைவலி போய்விடும்” என்று கூறினாா். இதைக் கேட்டு திகிலடைந்த அந்த பக்தைகள் கூறினா், “நாங்கள் இதைச் செய்ய முடியாது, நீ இறை வன், இந்தப் பிரபஞ்சத்தின் நாயகன். உன் பவித்ரமான சிரசை எங்கள் கால்களால் தொட்டு உன் திருமேனியை அசுத்தப்படுத்தத் துணிவது மிகப்பெரிய பாவச் செயலாகும்”.

பின்னா் ராதை அவ்விடத்திற்கு வந்தாள். அப்பொழுது தலைவலி அதிகமாகி விட்டதாக பாசாங்கு செய்தாா். அவள் தன் பிரபுவை நோக்கி, “நான் உனக்காக என்ன செய்ய வேண்டும்?” என கேட்டுக் கொண்டு ராதை கண்ணனின் அருகில் ஓடிச் சென்றாள். மற்ற பக்தைகளிடம் விடுத்த வேண்டுகோளை கிருஷ்ணன் அவளிடமும் விடுத்தான். ராதை உடனேயே கிருஷ்ணனின் தலைமீது நின்றுவிட்டாள். கிருஷ்ணனுடைய ‘தலைவலி’யும் மறைந்துவிட்டது. அவா் தூங்கிவிட்டாா். மற்ற சிஷ்யைகள், தூங்கும் கிருண்ணனிடமிருந்து ராதையை கோபத்துடன் பிடித்து இழுத்தவாறு;

“நாங்கள் உன்னைக் கொன்றுவிடுவோம்,” என்று மிரட்டினா்.

“ஏன்?” என்று ராதை கேட்டாள்.

“நம் குருவின் தலைமீது நிற்க உனக்கு என்ன தைரியம்?” என்று மற்றவா்கள் கேட்டனா்.

“அதனால் என்ன?” ராதை எதிா்த்தாள். “அது அவரை வலியிலிருந்து விடுபட வைக்கவில்லையா?” என்றாள் ராதை.

“உன்னுடைய இந்த கொடிய செயலுக்கு நீ மிகவும் கீழான நரகத்திற்குத்தான் போவாய்” என்று அவா்கள் கூறினா்.

“ஓ, அதைப்பற்றித்தான் நீங்கள் கவலைப்படுகிறீாகளா?” ராதை புன்னகைத்தாள். “நான் நரகத்திலிருப்பது அவரை ஒரு நொடிநேரமே மகிழ்ச்சிப்படுத்துமானால்கூட நான் என்றென்றைக்கும் அங்கு சந்தோஷமாக இருப்பேன்,” என்று அவள் பதிலளித்தாள்.

ராதையின் பதிலைக் கேட்ட அவா்களுக்கு “கிருஷ்ணன் ஏன் ராதையிடம் பிரியமாக இருக்கிறாா் என்று விளங்கியது. ராதைக்கு மட்டும்தான் தன்னைப்பற்றிய சிந்தனையில்லாமல், தனது பிரபுவின் சுகம் மட்டும் கருத்தில் இருந்ததை உணா்ந்துகொண்ட மற்ற சிஷ்யைகள் அனைவரும் ராதை முன் தலைகுனிந்தனா்.”

தாய்தந்தை, கணவன்மனைவி, சகோதரசகோதரி, குருசீடா் போன்ற உறவுகளைக் கொண்ட அனைத்து மனிதா்களுக்குள்ளும் இறைவன்வாழ்கிறான். அவ்வாறிருக்க, இறைவனிடத்தில் நாம் எவ்வாறு அன்பு செலுத்துகிறோமோ அவ்வாறு அனைவரிடத்திலும் அன்பு செலுத்தி சொந்தம்



கொண்டாடியவாறே ஒவ்வொரு உறவுகளையும் பாா்க்கும்பொழுது அங்கே பரஸ்பரம் சண்டை, கோபம், பகை, விரோதம் மற்றும் இழிவுபடுத்துதல் போன்றவைகளுக்கு வாய்ப்பிராது. அப்பொழுது, கருணை வடிவமான இறைவனை நேசிக்கத் தொடங்கும்பொழுது சுயநலம் மறைந்துவிடுகிறது. மாறாக இறை பேரன்பு ஊற்றாகப்பெருகி அனைவரிடத்திலும் வியாபிக்க நேருகிறது.



அப்பொழுது நமக்குள் இருக்கும் இறைவனே நம்மை மேலும் மேலும் பக்குவமடையச்செய்வான். அவ்வாறு சிறிது சிறிதாக முதலில் மனிதர்கள் பின்னர் உயிரினங்கள், பின்னர் செடி கொடிகள் என்று அனைத்தும் இறைவனே என்பதை நாம் காணத் தொடங்குவோம். சுயநலமின்றி, தன்னைப்பற்றிய எண்ணமின்றி எப்பொழுதும் இறைவன்மேல் தன்னை அர்ப் பணித்த வண்ணம் உண்மையான, நிபந்தனையற்ற அன்புடனிருக்கும் ராதை போன்று அனைவரும் இறைவனிடத்தில் தங்களை அர்ப் பணித்து உண்மையான அன்புகொண்டவாறு இருக்க வேண்டும் என்பதை குருதேவர் பரமஹம்ஸர் போதிக்கிறார். அவர் தொடர்கிறார்:

“இருந்தபோதிலும் தனக்கு அதிகதனிக் கவனம் கிடைத்ததால் ராதை கர்வம் நிறைந்தவளானாள். அதைப் புரிந்து கொண்ட கண்ண பிரான், “நாமிருவரும் ஒன்றாக எங்கேயாவது மறைவாகப்போய் இருக்கலாம்” என்று ராதையிடம் கூறினார். அவளுடன் அவர் தனியாக இருப்பதற்கு விரும்புவதாக அவளை நினைக்க வைத்து கர்வத்தைத் தூண்டிவிட்டார். அவள் மிகவும் சந்தோஷமடைந்து, தான் பிரியமாக நடத்தப்படுவதாக உணர்ந்தாள். அவர்கள் கொஞ்ச தூரம் நடந்து சென்றனர். கிருஷ்ணன் இளைப்பாறுவதற்காக நிற்கத் தயாராகவே இல்லை. இறுதியாக களைத்துச் சோர்ந்த ராதை, “சற்று நேரம் அமர்வதற்கு இதோ இந்த இடம் நன்றாக இருக்கிறதே” என்று யோசனை கூறினாள். கிருஷ்ணன் அதற்கு விருப்பமில்லாதவாறு காட்டிக் கொண்டு “இதைவிட நல்ல இடத்தைப் பார்க் கலாம்” என்று பதிலளித்தார். அவர்கள் நடந்தனர்; நடந்து கொண்டே இருந்தனர். கடைசியில் களைத்து சோர்வடைந்த ராதை, “என்னால் இனி கொஞ்சம்கூட நடக்க முடியாது” என்று முறையிட்டாள். அதற்கு கிருஷ்ணன், “நான் உன்னை சுமக்கட்டுமா?” என்று கேட்டார். இது ராதை யின் கர்வத்தை பெரிதும் மகிழ்வு படுத்தியது. ஆனால், அவள் கிருஷ்ணன் முதுகில் தாவ முயன்றபொழுது, அடடா! கிருஷ்ணனை காணவில்லை. அவள் தரையின்மேலிருந்த ஒரு மேட்டின் மீது விழுந் தாள். அவளது கர்வம் தகர்ந்தது. மண்டியிட்ட நிலையில் அவள் பணிவுடன் கதறினாள், “என் அன்பான தெய்வமே, நான் உன்னை சொந் தப்படுத்தி, அடக்கி ஆளவிரும்பியது என் தவறு. தயவு செய்து என்னை மன்னித்துவிடு”. கிருஷ்ணன் மீண்டும் தோன்றி அவளை ஆசிர்வதித்தார். அன்று ராதை ஒரு மிகப்பெரிய பாடத்தை கற்றுக் கொண் டாள். குருதேவரை பெண்மையின் மாயங்களால் கவரப்பட்டு அடக்கி ஆளப்படும் ஒரு சாதாரண மனிதனாகப் பார்ப்பது மிகப்பெரிய தவறாகும். குருதேவர் அவளுடைய உருவத்தை அல்லாமல் அவளுடைய ஆத்மாவைத்தான் விரும்புகிறார் என அவள் புரிந்து கொண்டாள்”.

ஒருவரின் கர்வத்தை இறைவன்இவ்வாறுதான் அடக்குவார்என்பதைஇந்நிகழ்வுமூலம்பரமஹம்ஸர் மனித குலத்திற்கு வெளிப்படுத்தியிருக்கிறார். காம, குரோத, லோப, மோக, அகங்காரம் ஆகிய அழுக்குகளை மனதிலிருந்து அறவே துடைத்து, அதற்குப் பதிலாக பிறரிடத்தில் தயை, பரிவு, கருணை, அன்பு, பணிவு, எதிலும் பற்றின்மை மற்றும் மன்னிக்கும் குணம் போன்றவற்றை வளர்த்துக்கொள்ள வேண்டும். இவை ஒரு மனிதனின் முக்கியமானதும் மேன்மையானதுமான குணங்களாகும். இவ்வாறான குணங்களுடைய ஒரு மனிதனுக்கு இறைவனுடன் எளிதில் தொடர்புகொள்ள முடியும்.

மீண்டும் மலரும்

குருப்ரியா,
செல் நெ.9894595909






# மற்றவர்களும் பயன்பெற
# அறிமுகப் படுத்துங்கள்....

ஆன்மீக மலர் மெயில் புத்தகத்தில் இதுவரை 8,000க்கும் மேற்பட்ட அன்பர்கள் தங்களது மெயில் முகவரியை பதிவு செய்துள்ளனர். பதிவு செய்த அனைவரின் இமெயில் முகவரிக்கு மாதம் இருமுறை நமது இதழ் இலவசமாக அனுப்பி வைக்கப்படும். இந்த சேவையைப் பற்றி அறியாத ஆன்மீக அன்பர்களும் பயன் பெற, நமது வாசகர்கள் உதவ வேண்டும். அவர்களது இ-மெயில் முகவரியையும் பதிவு செய்ய உதவுங்கள். பதிவு செய்த அன்பர்கள் மீண்டும் பதிவு செய்ய வேண்டியதில்லை.

தெரியாதவர்களுக்கு நமது சேவையை தெரியப்படுத்துங்கள்.

உங்கள் மெயில் முகவரியை பதிவு செய்ய

**aanmeegamalar@gmail.com**

**whatsapp: 7299992699**



# குழந்தை முதல் பெரியவர் வரை அனைவரையும் காக்கும்

# காப்புகயிறு

கெட்ட, துர்சக்திகளின் ஆதிக்கம் மனிதர்களை பிடிக்காமல் இருக்க நமது முன்னோர்கள் பல்வேறு வழிகளை பின்பற்றினார்கள். அதில் ஒன்றுதான் காப்பு...

இந்த காப்பு பெரும்பாலும் குழந்தைகள் முதல் முதியவர்கள் வரை அனைவரும் அணிந்திருப்பதை பார்த்திருப்போம். பெரும்பாலனவர்கள் மஞ்சள், கறுப்பு, சிவப்பு நிறங்களில் கயிறுகட்டுவார்கள் நம்மை தீய சக்திகளிடமிருந்து காக்கும் ஒருகவசமாக செயல்படும். பட்டுநூலினால் ஆன காப்புக்கயிறுகளை அணிவது அதிக பலன் தரும். மேலும் செம்பு, வெள்ளி, தங்கம், ஐம்பொன்னில் காப்பு செய்து போட்டுகொள்வார்கள். இது சிறப்பானதாக இருந்தாலும் பட்டு, தர்ப்பை, அருகம்புல் போன்றவை பிரபஞ்ச சக்திகளையும், நவக்கிரக கதிர் வீச்சுகளையும் ஈர்க்கும் தன்மை கொண்டவை அதனால் இவைகளை நூல்களாக தரித்து கைகளில் அணியலாம்.

குழந்தைகள் முதல் பெரியோர் வரை அனைவரும் அணிய வேண்டும். பட்டு, தர்ப்பை, அருகம்புல் போன்றவை மந்திரங்களின் அதிர்வுகளை ஈர்க்கும் தன்மை கொண்டவை. எனவே இவற்றினாலான ஆசனங்களில் அமர்ந்து தியானம் செய்வது, மந்திரங்கள் சொல்வது அதிக பலன் தரும். இது போலவே காப்புக்கயிறும் மந்திரங்களை ஈர்க்கும்.

இது போலவே நாம் அணியும் காப்புக்கயிறும் மந்திரங்களின் ஆற்றலை சேமித்து நம்மைக் காக்கும் மந்திரிக்கப்பட்ட எலுமிச்சங்கனியும் நம்மைக் காக்கும் ஆற்றல் கொண்டது. நாயுருவி, சீதெவிசெங்கழுநீர், அருகம்புல் போன்ற சில மூலிகைகளின் வேரையும் இதுபோல் மந்திர உருவேற்றி குளிசத்தில் (தாயத்து) அடைத்து அணிவார்கள்.

காசிக்கயிற்றில் முருகன், பிள்ளையார், சிவன், திருப்பதி போன்ற தெய்வங்களின் டாலர்களை கோர்த்து கழுத்தில் மாலையாகவும் அணிவதும் ஒரு வகையில் காப்பதே.

நாகரிகம் முற்றி வரும் இக்காலத்தில் பட்டையாக திருநீரு அணிய தயங்குபவர்கள் காசிக்கயிறு, அம்மன் கயிறு போன்ற காப்பு கயிறுகளை நாமும் அணிந்து, குழந்தைகளுக்கும் அணிவித்து காத்துக்கொள்ளுங்கள். அது நீங்கள் ஒரு இந்து என்று உணர்த்துவதாகவும் நம் சமய நம்பிக்கையை வளர்ப்பதாகவும். இருக்கும்.

சில சமுதாயங்களில் மணமகன் பெண்ணுக்கு எப்போதும் உன்னைக் காப்பேன் என்று ரசை அணிவிக்கும் சடங்குகள் உண்டு.





# பழைய சாதத்தின் 10 நன்மைகள்

முதல் நாள் சோற்றில் நீரூற்றி, மறுநாள் சாப்பிடும் இந்த பழைய சாதத்தில் தான் வைட்டமின் பி6 வைட்டமின் பி12 ஏராளமாக இருக்கிறது என்கிறது புது ஆய்வு. தவிரவும் உடலுக்கு, குறிப்பாக சிறு குடலுக்கு நன்மை செய்யும் 'ட்ரில்லியன்ஸ் ஆஃப் பாக்டீரியாஸ்' (கவனியுங்கள்: 'மில்லியன்' அல்ல 'ட்ரில்லியன்') பெருகி நம் உணவுப் பாதையையே ஆரோக்கிய மாக வைத்திருக்கிறதாம்!

கூடவே இரண்டு சிறிய வெங்காயம் சேரும் போது, நோய் எதிர்ப்பு சக்தி அபரிமிதமாக பெருகுகிறதாம். அப்புறம் பன்றிக் காய்ச்சல் என்ன, எந்தக் காய்ச்சலும் நம்மை அணுகாது!

பழைய சாதத்தின் நன்மைகள் சில

1. "காலையில் சிற்றுண்டியாக இந்த பழைய சாதத்தைக் குடிப்பதால், உடல் லேசாகவும், அதே சமயம் சுறுசுறுப்பாகவும் இருக்கிறது.

2. இரவே தண்ணீர் ஊற்றி மூடி வைப்பதால் இலட்சக்கணக்கான நல்ல பாக்டீரியாக்கள் இதில் உருவாகிறது.

3. மறுநாள் இதை குடிக்கும் போது உடல் சூட்டைத் தணிப்பதோடு குடல்புண், வயிற்று வலி போன்றவற்றையும் குணப்படுத்தும்.

4. அதுமட்டுமில்லாமல் இதிலிருக்கும் நார்ச்சத்து, மலச்சிக்கல் இல்லாமல் உடலை சீராக இயங்கச் செய்கிறது.

5. இந்தப் பழைய சாதம் உணவு முறையை சில நாள் தொடர்ந்து சாப்பிட்டால் இரத்த அழுத் தம் கட்டுக்குள் வந்துவிடும், உடல் எடையும் குறையும்.

6. மிகவும் முக்கியமான விஷயம் என்னவென் றால் உடலுக்கு அதிகமான □ சக்தியை தந்து நாள் முழுக்க சோர்வின்றி வேலை செய்ய உதவியாக இருக்கிறது.

7. அலர்ஜி,அரிப்பு போன்றவை கூட சட்டென்று சரியாகி விடும்.

8. அல்சர் உள்ளவர்களுக்கு இதைக் கொடுத்து வர,ஆச்சரியப்படும் அளவிற்குப் பலன் கிடைக்கும்.

9. எல்லாவற்றிற்கும் மேலாக நோய் எதிர்ப்பு சக்தி அதிகளவில் கிடைப்பதால், எந்த நோயும் அருகில்கூட வராது.

10.ஆரோக்கியமாக அதே சமயம் இளமை யாகவும் இருக்கலாம்.

Owned, Published by C.NAGARAJAN. Design by BHAANRAJAGRAPHICS, CHENNAI. Published from New No.16, Old No.18, Bharatheeswarar Colony, 4th Street, Kodambakkam, Chennai - 600 024.
Editor : C.Nagarajan,
E-mail: aanmeegamalar@gmail.com Website: http://www.aanmeegamalar.com Cell: 7299992699

# மற்ற உயிருக்கு மதிப்பு கொடுப்பன் ஞான வாசலுக்கு நுழைந்துவிட்டான்

மனிதன் எவ்வாறு வாழ வேண்டும் என்பதை உலகிற்கு உணர்த்தியவர் மகாவீரர். தெய்வ நிலையை அடைய தனது அரச பதவியை துறந்தவர். இவர் உருவாக்கிய தத்துவங்களை பின்பற்று கிறவர்கள் ஜெயின் மதத்தினராக போற் றப்படுகின்றனர். சிறு உயிருக்கும் தீங்கு விளைவிக்க கூடாது என்பது இவர் கருத்து.



❖ மனதில் நல்ல நம்பிக்கை இல்லாவிட் டால் நல்லறிவு உண்டாகாது. நல்லறிவு உண்டாகாவிட்டால் நல்லொழுக்கம் ஒருவ ருக்கு வாய்ப்பதில்லை.

❖ மற்றவர்களுக்கு தீங்கு இழைப்பவர்கள் மானம் மரியாதை அற்றவர்களாவும், மற்றவர்களுக்கு தீங்கிழைத்த குற் றத்தை போக்க விரும்புபவர்களே உயர்ந்தவர்களாவர்.

❖ அறிவு, அழகு, தவம், கல்வி, ஒழுக் கம் ஆகியவற்றை எண்ணி கர்வம் கொள்ளுதல் கூடாது. இதனால் மனம் தூய்மை பெறும்.

❖ மனிதன் போலி கவுரவத்திற்காக வேண்டாத ஆசை களை வளர்த்துக் கொண்டு அல்லல்படுகிறான்.

❖ வாய்மையைத் தன் வாழ்நாள் குறிக் கோளாகக் கொண்டவன் எவ்வளவு, துன்பங்கள் துயரங்கள் தன்னைச் சூழ்ந்த போதிலும் கலக்கம் கொள்வ தில்லை.

❖ உண்மை உழைப்பில் கிடைக்கும் ஊதியத்திற்கு நிகரானது எதுவுமில்லை. விவேகம் என்னும் நல்லறிவுக்கு ஈடான குணம் இல்லை.

❖ எந்த உயிருக்கும் தன் னால் சிறு கெடுதலும் உண் டாகக்கூடாது என்று நினைப்பவர்கள் ஞானத்தின் வாசலுக்குள் நுழைந்துவிட்டார்கள்.